ஜூலை – செப்டம்பர் (2025)

# கடந்து வந்த பாதை

மின்னிதழ்

WWW.JIHTN.ORG






## "Criminalising 'I Love Prophet Muhammad' Slogans is Unconstitutional, Politically Motivated, and an Insult to India's Pluralism"

**ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்**

தமிழ்நாடு – புதுச்சேரி

# மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்

## உடுமலை CIO பரப்புரை அறிமுக நிகழ்ச்சி



உடுமலை கிளை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணி சார்பில் 30.06. 2025 திங்கட்கிழமை அன்று இரண்டு இடங்களில் பாலர்களுக்கான (CIO) அகில இந்திய அளவில் நடைபெறும் பரப்புரை "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" என்ற பிரச்சார இயக்க அறிமுக கூட்டம் நடைபெற்றது. இந்த சிறப்பு நிகழ்ச்சிக்கு உடுமலை கிளை மகளிர் அணி பொறுப்பாளர் சகோதரி : A.மெஹராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். பாலர் சங்க (CIO) பொறுப்பாளர் சகோதரி: ஆயிஷா அவர்கள் நிகழ்ச்சியை வழி நடத்தினார்கள். இந்நிகழ்வில் மரங்களின் தேவை, அவற்றைப் பாதுகாத்து வளர்க்க வேண்டிய அவசியம், மற்றும் இயற்கை வளத்தின் முக்கியத்துவம் பற்றிய பல கருத்துக்கள் குழந்தைகளுக்கு உரைகளாக நிகழ்த்தப்பட்டது. மேலும் குழந்தைகள் தங்கள் கரங்களால் செடிகள் நட்டு மகிழ்ந்தனர். இதில் 40 கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டனர்.

# மண்ணில் கைகள்..! இந்தியாவில் இதயங்கள்..!



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் குழந்தைகள் இஸ்லாமிய அமைப்பு சார்பாக நாடு முழுவதும் 10 லட்சம் மரக்கன்றுகளை நடுவோம் என்ற உறுதி மொழியுடன் மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் என்ற மையக்கருத்தின் அடிப்படையில் பரப்புரை மேற்கொள்ளப்படுகிறது இதன் ஒரு பகுதியாக கடந்த 28 6 2025 சனிக்கிழமை திருப்பூர். ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் குழந்தைகள் இஸ்லாமிய அமைப்பு சார்பாக அப்பகுதியில் மரக்கன்றுகள் நடப்பட்டது இந்த பரப்புரையினை மக்களுக்கு

எடுத்துக் கூறுவதன் விதமாக அறிமுக நிகழ்ச்சியும் நடைபெற்றது. குழந்தைகளுக்கு ஆர்வத்தை அதிகப்படுத்தும் விதமாக CIO வின் பொறுப்பாளர் உரை நிகழ்த்தினார்கள் இயற்கை இறைவன் நமக்கு கொடுத்த அருட்கொடை அதை மனிதன் பாதுகாக்க வேண்டும்.

இயற்கை வளங்களை பேணுவது மனிதனின் பொறுப்பாகும்.இதை மனிதன் தன் சுயநலத்தக்காகவோ, வீணாக்கவோ, பயன்படுத்தக் கூடாது. இஸ்லாம் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டுகிறது. மரம் நடுதல்,பயிர்களை வளர்ப்பது போன்ற செயல்களை ஊக்குவிக்கிறது இவ்வாறு உரை நிகழ்த்தப்பட்டது, இந்த நிகழ்ச்சியில் ஏராளமான குழந்தைகள் கலந்து கொண்டார்கள்.

# அதிகாலை அமர்வுகள்...




அதிகாலை அமர்வுகள் JIHமதுரை 6.04.25 ஞாயிற்று கிழமை முனிச்சாலை JIH அலுவலகத்தில் நடைபெற்றது.

ரமலானுக்கு பின் நாம் என்கிற தலைப்பில் சகோ ஜனாப். முனவர் சுல்தான் அவர்கள் உரையாற்றினார் அவர் கூறுகையில், ரமலானுக்கு பின் அவசியம் பின்பற்ற வேண்டிய அம்சங்கள்

1.பஜர் தொழுகை இமாம் ஜமாத்தோடு தொழுவது

2.பொய், புறம் போன்ற குணங்களில் இருந்து ரமலானை போன்றே மற்ற நாட்களிலும்விலகி இருப்பது

3.குர்ஆன் ஓதுவது பொருள் உணர்ந்து படிப்பது

4 ததப்பருல் குர்ஆன் (குர்ஆனை சிந்தித்து ஆழமாக கருத்துன்றி புரிந்து கொள்வது) போன்ற தன்மைகள் ரமலானுக்கு பின் அவசியம் தொடர வேண்டிய அம்சங்கள் என உரையில் கூறினார்.

அல்ஹம்துலில்லாஹ், ஏராளமான ஆண்கள் பங்கேற்றனர்.

## விளக்க நிகழ்ச்சி...




20-04-25 அன்று ஞாயிற்று கிழமை மதுரை ரம்ஜான் மஹாலில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு JIH மதுரை மகாமீ அமீர் மௌலவி A.முஹைதீன் குட்டி உமரி அவர்கள் முன்னிலை வகித்தார்கள் மதுரை முனிச்சாலை நூர்தீன் பள்ளி இமாம் மௌலவி அல் ஹாபிள் A. காதீர் உசேன் யூசுபி அவர்கள் வக்ஃப் சொத்து அல்லாஹ்வின் சின்னம் என்கிற தலைப்பில் உரை நிகழ்த்தினார், சிறப்புரையாக : JIH தமிழ்நாடு& புதுச்சேரி மாநில செயலாளர் பேராசிரியர் A. ஹஜ் முஹைதீன் அவர்கள் வக்ஃப் ஓர் விளக்கம் என்கிற தலைப்பில் விரிவான விளக்கத்தை தந்தார். நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

## மருத்துவர் சந்திப்பு...

சத்திரகுடியில்மருத்துவர் சந்திப்பு, ஜூலை 1 மருத்துவர் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றன. இந்நாளில் இஸ்லாமிக் சென்டர் ஊழிய வட்டம் சார்பாக பல்வேறு பகுதிகளில் பல நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டது. அதில் ஒன்று ஜுலை 1 மருத்துவர் தினத்தை முன்னிட்டு ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் ஆலிமும்மான இமாம் அபுபக்கர் அவர்கள், சத்திரகுடி அரசு மருத்துவமனை டாக்டர் பிரதீப் குமார் அவர்களை சந்தித்து வாழ்த்துகூறி இனிப்பு வழங்கினார்.



## தனி நபர் சந்திப்பு பிரச்சாரம்.

தனிநபர் சந்திப்பு பிரச்சாரம் விருதுநகர் மாவட்டம் சிவகாசி, ஊராம்பட்டியில் போதை ஒழிப்பு பிரச்சாரம் நடைபெற்றது. போதை ஒழிப்பு சம்பந்தமான பிரச்சாரங்கள் பல நிகழ்வாக பல்வேறு பகுதிகளில் இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக நடைபெற்று வருகின்றது. அதில் ஒரு நிகழ்ச்சியாக ஊராம்பட்டியில் தனிநபர் சந்திப்பு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ஜூன் 26 முதல் ஜூலை

16 வரை போதை ஒழிப்பு தொடர் பிரச்சாரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊராம்பட்டியில் தனிநபர் சந்திப்பை மேற்கொள்ளப்பட்டு போதை சம்பந்தமான ஆபத்துகளையும், பாதிப்புகளையும் மக்களுக்கு விழிப்புணர்வு செய்து பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டன. பெண்கள் இடத்திலும் போதை சம்பந்தமான பாதிப்புகள், போதையில் சிக்கியிருக்க கூடியவர்களுக்கான தீர்வுகளுக்கான வழிகள் என பல்வேறு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.



50 நபர்களுக்கு பிரச்சாரத்தின் மூலம் செய்திகள் சேர்ப்பிக்கப்பட்டது ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் ஊராம்பட்டி பள்ளிவாசல் இமாமான அக்பர் இக்பால் அவர்கள் அவர்கள் பிரச்சாரத்தை முன்னெடுத்து சிறப்பாக வழி நடத்தினார்.

# போதை ஒழிப்பு பிரச்சாரம்...

இராமநாதபுரம் மாவட்டம் மறவாய்க்குடியில் போதை ஒழிப்பு பிரச்சாரம் ஜூன் 26 முதல் ஜூலை 16 வரை இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. போதை ஒழிப்பு சம்பந்தமாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிட்டு தெருமுனை கூட்டம் குட்டீஸ் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு காண பிளக்ஸ் அரங்க கூட்டம் தனிநபர் சந்திப்பு இப்படி பல நிகழ்ச்சிகள் நடத்த முடிவு செய்யப்பட்டது அதில் பல்வேறு பணிகள் பல பகுதிகள் நடந்து வருகின்றன. 1.7.2025 திங்கட்கிழமை அன்று மறவாய்குடியில் மஃரிப் தொழுகைக்கு பின் போதை ஒழிப்பு தினசிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் கோட்டையேந்தல் இமாம் ஷாஜஹான் தாஃவதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மரவாய்குடி ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர் மரறவாய்க்குடி ஜூம்ஆ பள்ளிவாசல் இமாமும் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரமான ஆலிம்,




ஷேக் முகமது தாஃஃவதி அவர்கள்இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அழகுற வழிநடத்தி அமைத்து தந்தார். ஆண்கள் மற்றும் பெண்கள் திறலாக கலந்து கொண்டனர்.

## உடுமலை ஜூலை 01 மருத்துவர்கள் தினத்தில் மருத்துவர்கள் சந்திப்பு...

ஜுலை 01 மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு அன்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) உடுமலை கிளை சார்பாக உடுமலை நகர் பகுதியில் இருக்கும் மருத்துவர்களை குழு ரீதியாக சந்திக்கப்பட்டது. சந்திப்பின் வாயிலாக மருத்துவர்கள் தின வாழ்த்துக்களை கூறி இனிப்பு வழங்கி வக்ஃஃப் பற்றிய செய்திகள் கூறப்பட்டு உதயதாரகையும், வக்ஃஃப் புத்தகமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

சந்திக்கப்பட்ட மருத்துவர்கள்:

1. Dr.ரகுநாத் BDS., SNR Dental care
2. Dr. ஷாஜஹான் MBBS., UK Hospital
3. Dr.கார்த்திக்கேயன் BDS., Krishna dental hospital
4. Dr.ஹரி பிரஷாத் BDS., HARI Dental care
5. Dr. சவிதா MBBS, DGO (ஸ்ரீ சக்ரா hospital)
6. Dr. கவிதா MBBS, DGO (ரக்ஷா hospital)
7. Dr. வனஜா MBBS, MD
8. Dr. சாருலதா MBBS, DA சிவகனி hospital
9. Dr. E. மஞ்சுளா MD, OG (Bharani Medical Centre)
10. Dr. பிரபுலதா MBBS,









11. மது பிரியா B.P T., CDNT; ஹெல்த்கேர் கிளினிக்)
12. Dr. ஷெட்டி MD,

சந்திக்கப்பட்ட மருத்துவர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியை தெரிவித்தனர். இந்த நாளை நினைவில் வைத்து எங்களை சிறப்பு செய்வது எங்களுக்கு மென்மேலும் மகிழ்வை தருவதாகவும் தெரிவித்தனர் மேலும் சில தகவல்களை மருத்துவர்கள் உங்க பணிகளை நீங்கள் மிக நேர்த்தியாக செய்கின்றீர்கள் என்றும் நாங்கள் தான் உங்களை வாழ்த்த வேண்டும் என்றும் எங்களுடன் மிகுந்த நட்பை பாராட்டினார்கள் மேலும் மருத்துவர் Dr. E.மஞ்சுளா MD., OG அவர்கள் கூறும்போது வக்ஃபு சொத்து என்பது அவரவர் சமுதாய மதத்தினரிடம் பாராமறி க்கப்டுவது தான் நியாயமான ஒன்று என்றும் அதில் மற்றவர்கள் குறிக்கிடுவது மிகுந்த தவறு என்பதை எங்களிடம் சுட்டிக் காட்டினார்கள் இந்த சந்திப்பு ஜமாஅத்தின் உடுமலை கிளைத்தலைவர் ஜனாப் : ட. சான் பாட்ஷா அவர்கள் தலைமையில் மண்டல அமைப்பாளர் ஜனாப் S.A.K. ஜெய்லானி அவர்கள் முன்னிலையில் மகளிர் அணி தலைவி சகோதரி A.மெஹராஜ் ஊழியர் வட்டப் பொறுப்பாளர் ஆயிஷா ஹக்கீம், Gio பொறுப்பாளர் சபீனா, Cio பொறுப்பாளர் ஆயிஷா பர்வீன், ஊழியர் அல்தாப் மற்றும் பைத்துல்மால் பொறுப்பாளர் ரிஹானா ஆகிய உறுப்பினர், ஊழியர்கள் பங்கு பெற்று சந்திப்பை சிறப்பாக்கினார்கள்.

## கடையநல்லூர் CIO சார்பாக நடைபெற்ற மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்.



1) 14/01/1447 (11/07/2025) வியாழக்கிழமை கடையநல்லூர் CIO சார்பாக மகளிர் அணி மங்களாபுரம் ஊரில் உள்ள ருக்குமணி உயர்நிலைப் பள்ளிக்கு சென்று மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் என்ற பரப்புரையை



முன்னிட்டு மாணவர்கள் மத்தியில் மரங்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினர், மகிழ்வுடன் மரங்கள் நட்டு பராமரிப்பதாக உறுதியளித்தனர். அல்ஹம்துலில்லாஹ் இதில் 30க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டனர். சிறப்பான முயற்சி என பள்ளி ஆசிரியர்கள் பாராட்டி னர்.தலைமையாசிரியருக்கு ஹஜ்ஜின்நாயகர் புத்தகம், சமரசம், ஆசிரியைகளுக்கு உதயதாரகை புத்தகம் அன்பளிப்பு செய்யப்பட்டது.



14/01/1447 (11/07/2025) வியாழக்கிழமை கடையநல்லூர் வட்டம் CIO சார்பாக சாதனா வித்யாலயா (பாலஅருணாச்சலபுரம்) ஊரில் உள்ள பள்ளிக்கு சென்றோம். அங்கு தலைமை ஆசிரியரை சந்தித்து மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் பரப்புரை பற்றி எடுத்துரைத்தோம். மேலும் குழந்தைகளுக்கு மரங்கள் பற்றிய செய்திகள் கூறினோம். அங்குள்ள எல்லா குழந்தைகளும் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். மேலும் குழந்தைகள் மூலம் மரங்கள் நட செய்தோம். பள்ளி முதல்வர் இது புதிய முயற்சி பிள்ளைகள் மூலம் மரங்கள் நடச்செய்தல். என்று பாராட்டுகளைத் தெரிவித்தார். அவர்களிடம் CIO குறித்து அறிமுகம் செய்தோம். தாளாளர் மயில் கண்ணு மேடம் Collec-tions ஹஜ்ஜின் நாயகர் புத்தகம், உதயதாரகை புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கினோம்.



## தர்பியா நிகழ்ச்சி...

திருப்பூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பாக ஆண்கள் - பெண்கள் உறுப்பினர், ஊழியர், அபிமானிகளுக்கான தர்பியா நிகழ்ச்சி நடைபெற்றது. திருப்பூர் ஜமாஅத் தலைவர் ஜனாப். முகமது காசிம்


அவர்கள் தலைமை வகித்தார். இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் வி.எஸ். அமீன் அவர்கள் கலந்துகொண்டார்கள், மேலும் மண்டல பொறுப்பாளர் கே.எம். முஹம்மது அவர்களும் கலந்து கொண்டார்கள் மிக அழகிய உரைகள் நடைபெற்றது. கலந்து கொண்ட அனைத்து நபர்களுக்கும் இந்த நிகழ்வு முக்கியதுவம் வாய்ந்ததாக அமைந்தது மண்டல பொறுப்பாளர் கே.எம். முஹம்மது தலைமையில் புத்தக கலந்துரையாடல் நடைப் பெற்றது. மதிய அமர்வில் வி.எஸ். அமீன் அவர்கள் ஐமாஅத் ஆலோசனை குழு உறுப்பினர் (ஜமாஅத் நோக்கங்களும் செயல்பாடுகளும்} என்ற தலைப்பின் கீழ் உரையாற்றினார் அனைவருக்கும் இந்த நிகழ்வு பயனுள்ளதாக அமைந்தது.



# மருத்துவர் சந்திப்பு...

சிவாகாசி - ஊராம்பட்டியில், மாரனேரியில் மருத்துவர்கள் சந்திப்பு ஜூலை 1 மருத்துவர் தினமாக அனுப்பப்பட்டு வருகின்றன. இந்நாளில் இஸ்லாமிக் சென்டர் ஊழிய வட்டம் சார்பாக பல்வேறு பகுதிகளில் பல நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டது. ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் , ஊராம்பட்டி இமாமான ஆலிம் அவர்கள் மருத்துவர்களை சந்திப்பு நிகழ்ச்சியை மேற்கொண்டார்.

1. ஊராம்பட்டிக்கு அருகில் உள்ள விளாம்பட்டியில் கிளினிக் வைத்துள்ள பொது மருத்துவர் டாக்டர. ஸ்ரிதர் MBBS அவர்களை சந்தித்து வாழ்த்து கூறி இனிப்பும் சாந்திக்கு வழி புத்தகமும் பரிசளிக்கப் பட்டது. அதற்கு கைமாறாக அந்த டாக்டர் தனது வாழ்த்தின் வெளிப்பாடாக ஒரு பேனா பரிசளித்தார்.






2. மேலும் மற்றொரு மருத்துவர் புவனேஸ்வரன். சொந்த ஊர் ஆலங்குளம் விருதுநகர் மாவட்டம். MBBS படித்தது சிவகங்கையில். MS படித்தது மதுரை மருத்துவ கல்லூரியில். இப்போது மாரனேரி அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் பணி புரிகிறார்.அவரை நான் சந்தித்து மருத்துவர் தின வாழ்த்துக்கள் கூறி இனிப்புடன் சாந்திக்கு வழி புத்தகமும் அன்பளிப்பு செய்தேன்.

3. மேலும் ஒரு மருத்துவர், விளாம்பட்டியில் Dr. P. K. S. P. பொன் மூரத்தி ராஜா MBBS அவர்களை சந்தித்து மருத்துவர் தின வாழ்த்துக்கள் கூறி அருள் மொழி புத்தகம் அன்பளிப்பு செய்தார்.

# போதை ஒழிப்பு பிரச்சாரம்...

முஹமதியாபுரத்தில் போதை ஒழிப்பு பிரச்சாரம் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் - JIH இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக போதை ஒழிப்பு பிரச்சாரம் ஜூன் 26 முதல் ஜூலை 16 வரை தொடர் பிரச்சாரம் நடத்தப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக போதை ஒழிப்பு பிரச்சாரத்தை முன்னிட்டு 7/7/2025 திங்கட்கிழமை முஹமதியாபுரத்தில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக இராமநாதபுரம் ஜமாத்துல் உலம வட்டார பொருளாளரும் ரமலான் நகர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைமை இமாம் மௌலவி சம்சுதீன் பைஃஜி அவர்கள் கலந்து கொண்டார்.




நிகழ்ச்சியின் ஆரம்பமாக இராமநாதபுரம் புறநகர் ஊழியர் வட்டம் பொறுப்பாளரும் முஹமதியாபுரம் இமாம் அபுபக்கர் அவர்கள் கிராஅத் ஓதி அமர்வை தொடங்கி வைத்தார். முகமதியாபுரம் ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த மௌலவி சம்சுதீன் அவர்கள் போதையின் தீமையை பற்றியும் கை பேசியால் ஏற்படும் தீமையை பற்றியும் உரை நிகழ்த்தினார்கள். இந் நிகழ்வில் ஆண்கள் பெண்கள் இளைஞர்கள் மாணவ மாணவிகள் என மொத்தம் 72 நபர்கள் கலந்துகொன்டார்கள்.

# கடையநல்லூர் CIO சார்பாக நடைபெற்ற மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்...

*அல்லாஹ்வின் அளப்பெரும் அருளால் 18/01/1447 ( 14 .07.25) திங்கள் கிழமை மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் CIO பரப்புரையை முன்னிட்டு மதியம் 3மணி அளவில் அரசு பெண்கள் பள்ளியிலும், அஸ்ஸலாமியா அரபிக் கல்லூரியிலும் ஜமாஅத் ஊழியர்கள் அனைவரும் சென்று மரம் நடும் விழா நடை பெற்றது. இதில் அரசு பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களுக்கு உதய தரகை புத்தகம் CIO நோட்டீஸ் கொடுத்தோம் மாணவிகள் 12 பேரும் ஊழியர்கள் 7 பேரும் கலந்து கொண்டார்கள். அத்துடன் ஜலாலியா பெண்கள் மதரசா சென்று 5 மரமும், ஜலாலியா மருத்துவமனை சென்று மருத்து வரை சந்தித்து ஒரு மரம் அன்பளிப்பு செய்தோம்.*



# நாடு தழுவிய பரப்புரை:

*குராயூரில் "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" நாடு தழுவிய பரப்புரையின் ஒரு பகுதியாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (CIO - Children Islamic Organisation) சார்பில் 15.07.25 செவ்வாய்க்கிழமை அன்று மரம் நடுதல் நிகழ்வும் மாணவ-மாணவிகளின் உரை நிகழ்ச்சியும் நடைபெற்றது. மாணவிகள் A. சபிகா, T. ஜாஸ்மீன், A. சுமையா ஆகியோர் இயற்கை வளங்கள், மரங்கள் வளர்ப்பது, மரங்கள் மூலம் கிடைக்கும் பலன்கள், மனித வாழ்வில் மரங்களின் பங்கு, பறவைகளுக்கு தரும் பயன் மற்றும் நீர் பூமிக்கு வருவதில் மரங்களின் முக்கியத்துவம் ஆகியவற்றை மிக அழகாக உரை நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து ஐந்து மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் 16.07.25 புதன்கிழமை அன்று குராயூர் துவக்கப்பள்ளி மாணவ-மாணவிகளை சந்தித்து இயற்கை வளங்களை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, இந்நிகழ்வில் 50 நபர்களுக்கு*



மேல் கலந்து கொண்டனர். நிகழ்வின் போது இரண்டு மாணவர்களும் ஒரு மாணவியும் தலா ஒரு மரக்கன்றை நடினர். இறுதியாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் மதுரை புறநகர வட்டப் பொறுப்பாளருமான மௌலவி அப்துல் கரீம் இன்ஆமி அவர்கள் இயற்கையின் அவசியம், அதை பாதுகாப்பது மற்றும் மனித வாழ்வில் அதன் பங்கு குறித்தும் மாணவ-மாணவியரிடம் உரை நிகழ்த்தினார்.

## ஓவியம் வரைதல்...




மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" பரப்புரையின் ஒரு பகுதியாக, அகில இந்திய அளவில் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் Children Islamic Organisation (CIO) சார்பில் நடைபெற்று வரும் நிகழ்வின் ஓவியம் தீட்டும் போட்டி 16/07/25 புதன்கிழமை அன்று இராமநாதபுரம் ரமலான் நகரில் உள்ள இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் 20 க்கும் அதிகமான மாணவ, மாணவிகள் பங்கேற்று இயற்கையின் மீது தங்களுக்கிருந்த ஆர்வத்தையும் அக்கறையையும் ஓவியம் மூலமாக வெளிப்படுத்தினார்கள்.

## மண்ணின் கைகள் இந்தியாவில் இதயங்கள் பரப்புரை:

அகில இந்திய அளவில் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் Children Islamic Organisation (CIO) சார்பில் நாடு தழுவி நடைபெற்று வரும் "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" பரப்புரையின் ஒரு பகுதியாக, இராமநாதபுரம் ரமலான் நகரில் இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக நான்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. 14/07/25 திங்கட்கிழமை அன்று மக்தப் மதரஸா மாணவி S. ஆஃபியா சனா அவர்கள் மரம் வளர்ப்பதும் அதன் சிறப்பும், மண்ணுக்கும் மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் கிடைக்கும் பயன்களும், மேலும் இஸ்லாம் மரம் வளர்ப்பதை பற்றி கூறியுள்ளதையும் குறித்து சிறு உரை ஆற்றினார்கள். 15/07/25 செவ்வாய்க்கிழமை மாலை மாணவ, மாணவிகளுக்கான மரம் வளர்ப்பு மற்றும் அதன் பயன்களை விளக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது, இதில் ஜமாத்தே இஸ்லாமி

ஹிந்த் ஊழியரும் ரமலான் நகர் ஜும்ஆ பள்ளி வாசல் தலைமை இமாம் ஷம்சுதீன் பைஜி அவர்கள் விழிப்புணர்வு உரை ஆற்றினார்கள். 16/07/25 புதன்கிழமை காலை ஓவியம் தீட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது, இதில் 20 மாணவ, மாணவிகள் பங்கேற்று இயற்கையின் மீது தங்களின் ஆர்வத்தையும் அக்கறையையும் ஓவியம் மூலமாக வெளிப்படுத்தினார்கள். அதே நாள் மாலை ஜமாத் தலைவர் அன்ஸத் ரிஸ்வான் தலைமையில் மரம் வழங்குதல் மற்றும் மரம் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது, இந்நிகழ்ச்சியின் மூலம் 30 மரக்கன்றுகள் நடப்பட்டது.




# கடையநல்லூர் CIO சார்பாக நடைபெற்ற மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்...

அல்லாஹ்வின் அருளால் 19/01/1447 (15.07.25) செவ்வாய்க்கிழமை கடையநல்லூர் மகளிர் வட்டம் CIO சார்பாக மசூதுதைக்கா நர்சரி பள்ளியில் மரம் நடும் விழா நடைபெற்றது, இதில் குழந்தைகள் குதூகலமாய் மரங்கள் நட்டனர். சகோதரி ஜுனைதா அவர்கள் மரங்களின் பயன்கள் மற்றும் “இயற்கையை நேசிப்போம்” என்ற தலைப்பில் சிறு உரை நிகழ்த்தினார்கள். ஆசிரியப் பெருமக்களின் ஆதரவுடன் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற, பரப்புரை நோட்டீஸும் விநியோகிக்கப்பட்டது.



# தஞ்சை சாலிடாரிட்டி: உறுப்பினர்கள் முதல் சந்திப்பு

தஞ்சை சாலிடாரிட்டி உறுப்பினர்களுக்கான முதல் கூட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 5:15 மணி முதல் 6:20 மணி வரை நடைபெற்றது,இக்கூட்டத்தில் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் தன்னார்வளர்களும் கலந்துக்கொண்டனர்,அல்ஹம்துலில்லாஹ். சகோ. ஹாஜி அவர்கள் குர்ஆன் வசனங்களை ஓதி துவக்கிவைத்தார். அதனைத் தொடர்ந்து, சாலிடாரிட்டி தமிழ்நாடு மாநில தலைவர் சகோ. முகமது



ரியாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில அமைப்புச்செயலாளர் ஜலாலுதீன் அவர்கள் கலந்துக்கொண்டு இஸ்லாத்தை எடுத்துரைப்பது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை மற்றும் கூட்டாக இருப்பதன் முக்கியத்தவம் பற்றி உரையாற்றினார். பின்னர் சகோ. பஹிம் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

## நாடு தழுவிய பரப்புரை மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்:

ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் Children Islamic Organisation (CIO) சார்பாக நாடு தழுவி நடைபெற்று வரும் “மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்” பரப்புரையின் ஓர் அங்கமாக, ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் தீன் நகர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைமை இமாம் மௌலவி ஜாஃபர் சாதிக் மன்பஈ அவர்கள் தலைமையில், ராமநாதபுரம் தீன் நகர் சார்பாக 16/07/2025 புதன்கிழமை அன்று மாணவ, மாணவிகளின் நிகழ்வுகள் நடைபெற்றது. இதில் மரம் நடும் நிகழ்வு, சிறு சொற்பொழிவு, ஓவியம் வரைதல், மேலும் “மரங்களை நேசிக்கின்றோம்” என்ற தலைப்பில் மரங்களை கட்டியணைத்து உரையாடல் நிகழ்வு நடைபெற்றது. மொத்தம் 12 மரக்கன்றுகள் நடப்பட்டு, மரங்களை நட்டு அதன் பயன்கள், வளர்ப்பின் அவசியம், தேவையில்லாமல் மரங்களை வெட்டுவதின் தீமைகள் குறித்து அல் ஜாஸியா, சுமையா, சப்ரின் ஹம்னா, வர்ஷினி, முஹ்சினா ஆகிய ஐந்து மாணவிகள் சிறு உரை ஆற்றினர். ஓவியம் தீட்டுதல் நிகழ்வில் தாரா அகிஃபா, அல் ஜாஸியா, சப்ரின் ஹம்னா, ஆரோக்கான், அஜ்மல் கைஸ், லியானா ஆகிய ஆறு மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இவ்வாறு நாடு தழுவிய பரப்புரை தீன் நகரிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.




## மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் -

# நாடு தழுவிய பரப்புரை...




ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் – Children Islamic Organisation (CIO) சார்பாக நடைபெற்று வரும் “மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்” நாடு தழுவிய பரப்புரையின் ஒரு பகுதியாக, இராமநாதபுரம் சிக்கல் அருகிலுள்ள கோட்டையந்தல் பகுதியில் 16/07/25 புதன்கிழமை அன்று மக்தப் மதரஸா மாணவ, மாணவிகள் சார்பில் மரக்கன்று நடுதல் மற்றும் ஓவியம் வரைதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாணவர்கள் M. ஹாரித், ரகீப் மற்றும் மாணவிகள் K. கிபாயா அசீம், K. கின்ஸா பர்வா ஆகியோர் கலந்து கொண்டனர். ஓவியம் வரைந்த மாணவர்களில் M. ஹாரித் மற்றும் K. கிபாயா அசீம் பங்கேற்றனர். மேலும், ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் கோட்டையந்தல் ஜும்ஆ பள்ளிவாசல் இமாம் ஷாஜகான் அவர்கள் பள்ளிவாசல் பெயர் பலகையில் மரம் வரைந்து, மரத்தினால் கிடைக்கும் நன்மைகள் குறித்து மாணவ, மாணவிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்.

# தகைசால் தமிழர் விருதிற்கு தமிழ்நாடு அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்காக வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.காதர் மொய்தீன் அவர்களை திருச்சி ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்(JIH) குழு இன்று 16.07.25 அவர்களின் இல்லத்தில் சந்தித்து தகைசால் தமிழர் விருதிற்கு தமிழ்நாடு அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்காக வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இச்சந்திப்பின் போது ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ் மாநிலத்

தலைவர் மௌலானா மௌலவி A.முஹம்மது ஹனிபா மன்பயீ அவர்கள் தேசிய தலைவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். மேலும் Radiance பத்திரிக்கையில் அவர் குறித்து எழுதிய கட்டுரையும் வழங்கப்பட்டது.

# இஸ்லாம் குறித்து அறிந்து கொள்ள கோவை கரும்புக்கடை மஸ்ஜிதுல் இஹ்ஸான் பள்ளிவாசலுக்கு வருகை தந்த “பாதிரியார் பயிற்சி மாணவர்கள்”.

கோவை நல்லாயன் புனிதப்பள்ளி மாணவர்கள் இஸ்லாம் குறித்து அறிந்துகொள்ளவும், முஸ்லிம்களின் வாழ்வியல் குறித்து தெரிந்துகொள்ளவும் நமது மஸ்ஜிதுல் இஹ்ஸான் பள்ளிவாசலுக்கு இன்று (18 ஜூலை 2025) வருகை தந்தனர். தொடர்ந்து 13 வருடங்களாக பாதிரியார் பட்டம் பெறவுள்ள மாணவர்கள் மஸ்ஜிதுல் இஹ்ஸான் பள்ளிவாசலுக்கு வருகை தருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்புடனும் மரியாதையுடனும் மஸ்ஜிதுல் இஹ்ஸான் பள்ளிவாசல் நிர்வாகிகள் பாதிரியார்களை வரவேற்றனர். தொடர்ந்து பள்ளிவாசல் தலைவர் ஜனாப். அக்பர் அலி அவர்கள், வுளூ என்ற அங்கசுத்தியின் அர்த்தம் மற்றும் அதன் ஆன்மீகப் பின்னணியைக் கூறியபோது, மாணவர்களின் விழிகளில் விழிப்பும் ஆழமும் காணப்பட்டது. அவர்களும் தாமாகவே வுளூ செய்து, பள்ளிவாசலுக்குள் நுழைந்தனர்.

இஸ்லாம் குறித்தான தேடலோடு பள்ளியில் அவர்கள் நுழைந்ததும் அஸர் தொழுகைக்கான நேரம் என்பதால் தொழுகையை பார்வையிட்டனர். தொழுகை முடிந்தவுடன், தொழுகையாளர்களும் பாதிரிமார்களும் பரஸ்பரம் இன்முகத்தோடு வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்ட காட்சிகள் இனிமையாக அமைந்தன.அதனைத் தொடர்ந்து சிறிய கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை பெருநகரத் தலைவர் ஜனாப். P.S. உமர் ஃபாரூக் சாஹிப் அவர்கள் பாதிரியார்களை வரவேற்று உரை நிகழ்த்தினார். பின்னர், ஜமாஅத் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் ஆசிரியர் M. சலீம் ( M.Sc., B.Ed., PGDSA) அவர்கள், இஸ்லாம் குறித்து மிகத் தெளிவாகவும், சுருக்கமாகவும் சிறப்புரையாற்றினார். தொடர்ச்சியாக பாதிரியார்கள் இஸ்லாம் குறித்து தங்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் விதமாக கேள்விகளை கேட்டு கலந்துரையாடினர். இந்நிகழ்வின் மூலமாக



இஸ்லாம் குறித்தான தெளிவான பார்வை அவர்களுக்கு கிடைத்தது. வருகை தந்த பாதிரியார்களுக்கு திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாமிய புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. CIO குழந்தைகள் “மண்ணில் கைகள், இந்தியாவில் இதயங்கள்” பிரச்சார இயக்கத்தை முன்னிட்டு மரக்கன்றுகளை பரிசாக வழங்கி பிரச்சார இயக்கத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துக்கூறினர். இந்நிகழ்வில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பொறுப்பாளர்கள், மஸ்ஜிதுல் இஹ்சான் நிர்வாகிகள், சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு, SIO கோவை மாநகர பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மண்ணில் கைகள் இந்தியாவின் இதயங்கள் பரப்புரை சம்பந்தமாக அறிமுக விழா...

“மண்ணில் கைகள் இந்தியாவின் இதயங்கள்” பரப்புரை தொடர்பாக, JIH மதுரையின் எட்டு வட்டங்களில் அந்த பகுதிகளின் விஐபிகளை முன்னிறுத்தி அறிமுக விழா நடைபெற்றது. இதில் முக்கியமாக CIO பொறுப்பாளர்களும் மகளிர் அணி பொறுப்பாளர்களும் பங்கேற்றனர். மேலும் தமிழ்நாடு அக்கிரிகல்ச்சர் கல்லூரியில் பணிபுரியும் டாக்டர் ராமகிருஷ்ணன் அவர்களை சந்தித்து பரப்புரை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது, இதனை அவர் பாராட்டி குழந்தைகளின் சமூக மற்றும் இயற்கைச் சிந்தனைகளை உயரமாக மதித்தார்.

## ஓவியப் போட்டி மூலம் சுற்றுச்சூழல் பரப்புரை!



இன்று (20.07.2025) கும்பகோணம் வட்டத்தில் “மண்ணில் கைகள்!!! இந்தியாவில் இதயங்கள்!!!” என்ற சுற்றுச்சூழல் பரப்புரையின் கீழ், அல் அமீன் பள்ளியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை மகளிர் அணி மற்றும் CIO சார்பாக



ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 8 பள்ளிகளில் இருந்து 120 குழந்தைகள் கலந்து கொண்டு தங்களின் கலைத்திறனை வெளிப்படுத்தினர். போட்டியில் பங்கேற்ற பள்ளிகள்: அல் அமீன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, செயின்ட் அனீஸ் பள்ளி, சரஸ்வதி பாடசாலை, காவேரி ஸ்கூல், மைதீன் ஸ்கூல், ஸ்டார் ஸ்கூல், செயின்ட் ஜோசப் ஸ்கூல், கிரைஸ் த கிங் பள்ளி ஆகியவை. இந்த நிகழ்வின் மூலம் மரங்கள் வளர்ப்பதின் முக்கியத்துவம் மற்றும் ஒரு மாத சுற்றுச்சூழல் பரப்புரை குறித்து குழந்தைகளுக்கு விளக்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ், இந்த முயற்சி இளைஞர்களிடம் சூழல் உணர்வை ஊட்ட உதவியது.

## சமூக மேம்பாடும் நமது பொறுப்புகளும் எனும் சிறப்பு அரங்க கூட்டம்...

மேலக்காவேரி முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மற்றும் மேலக்காவேரி இஸ்லாமிய சோசியல் வெல்ஃபேர் அசோசியேஷன் (மிஸ்வா) இணைந்து நடத்திய “சமூக மேம்பாடும் நமது பொறுப்புகளும்” எனும் சிறப்பு அரங்க கூட்டம் இன்று (19.07.2025, சனிக்கிழமை) காலை 10 மணிக்கு மேலக்காவேரி பள்ளிவாசல் சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது. தலைமை: ஜனாப் எம். அபுல் கலாம் ஆசாத் (தலைவர், ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த், கும்பகோணம் கிளை). முன்னிலை வகித்தவர்கள்:

ஜனாப் எம். முஹம்மது அபூபக்கர் (பள்ளிவாசல் நாட்டாமை), ஹாஜி முஹம்மது (பள்ளிவாசல் செயலாளர்), ஜனாப் எஸ். அப்துல் ரஷீத் (பள்ளிவாசல் பொருளாளர்), ஜனாப் ஏ. ஜாபர் பாஷா (துணைச் செயலாளர்), ஜனாப் ஏ. ஆசாத் அலி (மிஸ்வா தலைவர்) சிறப்புரை: மௌலவி பி. முஹம்மது நாசர் புகாரி (மாநில



செயற்குழு உறுப்பினர், சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு) நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்: முகமது யூனுஸ் (ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த்) சமூக ஒற்றுமை, கல்வி, ஏழைகளுக்கான உதவிகள் மற்றும் இஸ்லாமிய இளைஞர்களின் பங்களிப்புகள் குறித்தும், "சமூக முன்னேற்றத்தில் ஒவ்வொருவரும் தம் கடமையை உணர வேண்டும்" என்று வலியுறுத்தினார். "இஸ்லாம் சமூக நீதி மற்றும் சேவையை ஊக்குவிக்கிறது; இளைஞர்கள் இதில் முன்னணியில் இருக்க வேண்டும்" என்று கூறினார். ஒற்றுமையான செயல்பாடுகள் மூலமே சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பதை எடுத்துக்காட்டினார்.



50 நபர்கள் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் இத்தகைய நிகழ்வுகளை தொடர்ந்து நடத்த உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## CIO- மதுரை மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்...

CIO மதுரை சார்பில் "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" பரப்புரையின் ஒரு பகுதியாக, மதுரை CIO குழந்தைகள் 120க்கும் மேற்பட்டோர் விவசாய நிலங்கள், தோப்புகள், காய்கறி தோட்டங்கள் உள்ளிட்ட நான்குக்கும் மேற்பட்ட இடங்களை பார்வையிட்டு, இயற்கை, விவசாயம், உணவுப் பொருட்களின் விளைச்சல் குறித்து நேரடியாக அறிந்து கொண்டு, இயற்கையையும் மண் வளத்தையும் பேண வேண்டிய முக்கியத்துவத்தை புரிந்துகொண்டனர்.



# பசுமையின் தூதர்கள் -காவல்துறை அதிகாரிகளைச் சந்தித்து மரக்கன்றுகளைப் பரிசளித்த “CIO குழந்தைகள்”

“மண்ணில் கைகள், இந்தியாவோடு இதயங்கள்” பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை பெருநகர் சார்பில் கோவை குனியமுத்தூர் காவல் சரக துணை ஆணையர் (Assistant Commissioner) Dr. அஜய் தங்கம் அவர்களை மரியாதையோடு சந்தித்த Children Islamic Organisation (CIO) குழந்தைகள் மறக்கன்றுகளைப் பரிசளித்தது மட்டுமல்லாமல், தங்களது பசுமை கனவையும் பகிர்ந்தனர். CIO குழந்தைகளை நேரில் வரவேற்ற துணை ஆணையர், அவர்களிடம் CIO குறித்தும், சுற்றுச்சூழலுக்காக மேற்கொள்ளும் முயற்சிகளையும் கேட்டு அறிந்தார். சிறுவர்களின் விழிப்புணர்வும், விடாமுயற்சியும் அவரை ஆழமாக கவர்ந்தது. குழந்தைகளை வெகுவாக பாராட்டினார்.




குழந்தைகள் பரிசளித்த மரக்கன்றினைப் பெற்றுக்கொண்டு உடனே தனது காவல் நிலைய வளாகத்தில் குழந்தைகளோடு இணைந்து நட்டு வைத்தார். “நீங்கள் எப்போது வந்தாலும், இங்கே நீங்கள் நடுகை செய்த மரம் உங்களுக்கே நிழல் தரும்,” என்றார் அவர், புன்னகையோடு! இந்த நிமிடங்கள், குழந்தைகளின் இதயத்தில் என்றும் மறக்க முடியாத ஒன்றாக பதிந்தன.

தொடர்ந்து ஜூலை 27 அன்று CIO கோவை சார்பாக நடைபெறவுள்ள “மண்ணில் கைகள், இந்தியாவோடு இதயங்கள்” பிரச்சார இயக்கத்தின் இறுதி நிகழ்வான குழந்தைகளின் சுற்றுச்சூழல் பேரணிக்காக காவல்துறையிடம் தங்கள் மழலை மொழியில் அனுமதியை கேட்டனர்.



பின்னர், கரும்புக்கடை காவல் நிலையத்திற்கு சென்ற CIO குழந்தைகள், அங்கு காவல் உதவி ஆய்வாளர் திரு. ஜோசெப் அவர்களையும் சந்தித்து மரக்கன்றுகளை வழங்கினார்கள். ஒரு வளமான எதிர்காலத்திற்கான குழந்தைச் செல்வங்கள் தயாராகிறார்கள் என்று காவல் அதிகாரிகள் குழந்தைகளையும், CIO பணிகளையும் வெகுவாக பாராட்டினர்.

## பள்ளிக்கூடங்களில் மரம் நடுதல்...




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கரூர் கிளையின் சார்பாக CIO நடத்தும் “மண்ணில் கைகள் இந்தியாவின் இதயங்கள்” பரப்புரையின் ஒரு பகுதியாக, காலை 10:30 மணி முதல் 12:15 மணி வரை கொங்கு மழலையர் பள்ளி, அல்பா மழலையர் பள்ளி மற்றும் நேஷனல் மாண்டிசரி ஸ்கூல் ஆகிய பள்ளிகளில் மரம் நடுதல் நடைபெற்றது. இதில் குழந்தைகள் ஆர்வத்துடன் மரங்களை நட்டு, பரப்புரை குறித்து சிறு உரைகள் ஆற்றப்பட்டன, மேலும் குழந்தைகள் மரங்களின் பயன்களைப் பற்றி பேசினார்கள். இந்நிகழ்ச்சியில் ஊழியர்களும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர், காலத்திற்கு தேவையான விஷயத்தை கையில் எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது எனவும் பாராட்டினர்.

## புதிய பள்ளிவாசல் திறப்பு விழா...

“ஜீனத் வாரிஸ் ஜும்ஆ பள்ளிவாசல் திறப்பு விழா” கடந்த ஞாயிற்றுக்கிழமை 20.07.2025 அன்று ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டம் சிக்கல் அருகிலுள்ள மறவாய்க்குடியில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் JIH தமிழ்நாடு & புதுச்சேரி மாநில தலைவர் மௌலானா, மௌலவி ஹனிபா மன்பஈ, JIH தமிழ்நாடு மாநில செயலாளர் மௌலவி முஹைஹயிதீன் குட்டி உமரி, JIH சென்னை மெட்ரோ நாஜிம் ஜனாப் நசீர் அத்தாவுல்லாஹ், பள்ளிவாசல் வக்ஃபு செய்த ஜீனத் வாரிசுதாரர்களான அகமது அலி சாகிப் மற்றும் சகோதரர்கள், இஸ்லாமிக் சென்டர்



வேலூர் பொதுச்செயலாளர் ஜனாப் துஃபைல் அஹமத், இஸ்லாமிக் சென்டர் மதுரை துணைச் செயலாளர் மற்றும் JIH மண்டல அமைப்பாளர் ஜனாப் நஜீர் ஹுஸைன், தலைமை இமாம் தேரிருவேலி மௌலவி அலி பாதுஷா மன்பஈ ஃபாஜில் ரஷாதி, கடலாடி வட்டார ஜமாஅத்துல் உலமா சபை செயலாளர் மௌலவி சிக்கந்தர் காஸிமி ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சி தலைமை இமாம் மௌலவி ஜாஃபர் சாதிக் மன்பஈ இறைமறை வசனம் ஓதியதன் மூலம் தொடங்கப்பட்டது, பின்னர் JIH உறுப்பினரும் சிக்கல் மதீனா நகர் ஜும்ஆ பள்ளிவாசல் இமாமான மௌலவி முஹம்மது ரபீக் வரவேற்புரை நிகழ்த்தினார்.




இதனையடுத்து ஜீனத் வாரிசுதாரர்கள் பள்ளிவாசலை வக்ஃபு செய்தார்கள், பின்னர் JIH தமிழ்நாடு & புதுச்சேரி மாநிலத் தலைவர் மௌலவி ஹனிபா மன்பஈ சிறப்புரை நிகழ்த்தினார். மறவாய்க்குடி ஊர் தலைவர்கள், உள்ளூர் சகோதர சமுதாய மக்கள் மற்றும் சுற்றியுள்ள வட்டார ஜமாஅத் தலைவர்கள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர். மதீனா நகர், வல்லக்குளம், பனிவாசல், சிக்கல், தொட்டியபட்டி, புத்தேந்தல், தத்தங்குடி, ஓடைக்குளம், கோட்டையந்தல், கீழச்செல்வனூர், வாலி நோக்கம், சாயல்குடி, ஒப்பிலான், தேரிருவேலி, பூசேரி, அணிகுருந்தன், முஹம்மதியாபுரம், மக்கா நகர், ரமலான் நகர், தீன் நகர், வன்னி வயல், பால்கரை, PSA நகர் நத்தம், மேலமடை, தேவிபட்டினம், குராயூர், காண்டை, சொக்கநாதன் பட்டி, அணைக்கரைப்பட்டி, ஊராம்பட்டி, கோடாங்கிப்பட்டி, கோட்டூர் மற்றும் விருதுநகர், இராமநாதபுரம் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊழியர்கள் ஆகியோரின் பங்கேற்பு நிகழ்வை சிறப்பித்தது. கலந்து கொண்ட முக்கியஸ்தர்கள், இமாம்கள், ஜமாஅத் தலைவர்கள், கிராம மற்றும் அரசு நிர்வாகிகள், பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட 120 க்கும் மேற்பட்ட சிறப்பு விருந்தினர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். அண்டை ஜமாஅத்தார்கள் பீரோ, மிக்சி, டேபிள் போன்ற அன்பளிப்புகளை வழங்கி தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். சுமார் 1000 நபர்களுக்கு மதிய விருந்து ஏற்பாடு

செய்யப்பட்டு அனைவரும் உபசரிக்கப்பட்டனர். இறுதியில் புதிய பள்ளிவாசல் திறப்பு விழா துஆவுடன் இனிதே நிறைவுற்றது.

## ஓவியப்போட்டி!



இன்று 20.07.25 கும்பகோணம் வட்டத்தில் “மண்ணில் கைகள்!!! இந்தியாவில் இதயங்கள்!!!” என்ற பரப்புரையை முன்னிட்டு அல் அமீன் பள்ளியில் மகளிர் அணி மற்றும் CIO சார்பாக ஓவியப்போட்டி நடத்தப்பட்டது, இதில் அல் அமீன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, செயின்ட் அனீஸ், சரஸ்வதி பாடசாலை, காவேரி ஸ்கூல், மைதீன் ஸ்கூல், ஸ்டார் ஸ்கூல், செயின்ட் ஜோசப் ஸ்கூல், கிரைஸ் த கிங் உள்ளிட்ட 8 பள்ளிகளில் இருந்து 120 குழந்தைகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் குழந்தைகளுக்கு ஓவியப் போட்டி நடத்தப்பட்டதுடன், ஒரு மாத பரப்புரை மற்றும் மரங்கள் வளர்ப்பதின் அவசியம் பற்றியும் விளக்கமாக கூறப்பட்டது.

## தர்பிய்யா நிகழ்ச்சி...



கருர் கிளை சார்பில் இன்று அரை நாள் தர்பிய்யா நிகழ்ச்சி இன்று (20-07-2025) காலையில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சியில் மண்டல அமைப்பாளர் சகோதரர். முஹம்மத் அப்பாஸ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் உறுப்பினர்கள், ஊழியர்கள் பங்கேற்ற கருத்தரங்கமும் நடைபெற்றது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சியில் உறுப்பினர்கள், ஆண்கள் ஊழியர் வட்டம், பெண்கள் ஊழியர் வட்டம், SIO மாணவர்கள், GIO மாணவிகள் மற்றும் வாலன்டியர்கள் என மொத்தம் 60 நபர்கள் கலந்து கொண்டனர்.



# மரக்கன்றுகள் நடும் பல்சமய நிகழ்ச்சி...

சிறுவர்கள் இஸ்லாமிய அமைப்பு (CIO) நடத்தும் மரக்கன்றுகள் நடும் பல்சமய நிகழ்ச்சி 20.07.2025 (ஞாயிறு) கரும்புக்கடை காந்திநகர் பகுதியில் மக்கள் படிப்பகம் நூலகத்தில் மாலை பொழுதில் நடைபெற்றது. ஆரம்பமாக, CIO மாணவி ரிஃபானா குர்ஆன் வசனம் ஓதி நிகழ்ச்சியை துவங்கி வைத்தார். தொடர்ந்து, JIH மத்திய மண்டல செயலாளர், சகோதரி. அனீஸ் பர்வீன் அவர்கள் தலைமை உரையாற்றினார்.




அடுத்து, CIO கோவை நபீலா கரம் சிறுவர்கள் இஸ்லாமிய அமைப்பு பற்றியும், பரப்பரை பற்றியும் அழகாக எடுத்துரைத்தார். சகோதரி .சஃபிக்கா அவர்கள் மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும், அதனை அழிப்பதால் ஏற்படும் தீங்குகள் பற்றியும் சிறப்பாக கூறினார்.
இந்நிகழ்ச்சியில் சிறப்ப விருந்தினர்களாக கலந்து கொண்ட திருமதி. திவ்யா (க்ரிசென்ட் மெட்ரிகுலேஷன் ஸ்கூல்) மற்றும் திருமதி. சுமித்ரா (இஸ்லாமிய மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி) ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டுடன் கதைகள் சொல்லி இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததற்கு பாராட்டுக்கு தெரிவித்தனர்.

சிறப்பு விருந்தினர்களுக்கு புத்தகம் அன்பளிப்பாக வழங்கி நூலகத்தின் முன் பகுதியில் CIO சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மரங்களை நட்டுவைத்து சிறப்பித்தனர் . இந்நிகழ்ச்சியில் 40 நபர்கள் கலந்து கொண்டனர்.

# மண்ணில் கைகள்! இந்தியாவில் இதயங்கள்!

மண்ணில் கைகள்! இந்தியாவில் இதயங்கள்! நாடு தழுவிய பரப்புரையை முன்னிட்டு JIH பாலக்கரை ஊழியர்கள் வட்டத்தின் CIO உறுப்பினர்களின் மரக்கன்றுகள் நடும் விழா 20.07.2025 (ஞாயிறு) அன்று திருச்சி குட்செட் ரோட்டில் உள்ள TELC சிறுவர் இல்லத்தில் வெகுசிறப்பாக நடைப்பெற்றது, இதில் 20க்கும் மேற்பட்ட CIO உறுப்பினர்கள் மற்றும் 70க்கும் மேற்பட்ட TELC இல்ல சிறுமிகள் பேரார்வத்துடன் இணைந்து மரக்கன்றுகளை நட்டு மகிழ்ந்தனர். முன்னதாக நடைபெற்ற



நிகழ்வில் கிளை செயலாளர் முனைவர் அப்துல் ரஜாக் பரப்புரையின் நோக்கத்தை விளக்கி சிறுவர்களுக்கு அறிவுரை வழங்கினார், TELC இல்லத்தின் பொறுப்பாளர் சகோ. எஸ்தர் நன்றித் தெரிவித்தார், மக்கள் தொடர்பு செயலாளர் சகோ. நவாஸ் கான் நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்தார். இந்நிகழ்வில் CIO பொறுப்பாளர்கள் சகோ. முஹம்மது பாரூக், சகோ. அப்துல் அஜீஸ், ரியாத் வட்ட ஊழியர் முனைவர் அனீஸ் அஹ்மது, நிகழ்ச்சி பொறுப்பாளர் Er. முஹம்மது இப்ராஹீம் உள்பட பாலக்கரை வட்ட ஊழியர்கள் மற்றும் அபிமானிகள் பலர் கலந்து கொண்டனர். வல்ல இறைவன் இப்பணியை ஸதக்கதுல் ஜாரியாவாக அங்கீகரித்து நம் அனைவர் மீதும் அருள் புரிந்து இம்மையிலும் மறுமையிலும் அளப்பரிய நற்கூலியை வழங்குவானாக!

# மரம் நடுவிழா...

கோனிமேடு கிளை சார்பாக இன்று (20-07-2025) காலை 8.30 மணிக்கு பழவேற்காடு-காட்டூர் பகுதி சதுப்புநில காடுகளில் மரம் நடுவிழா கொண்டாடப்பட்டது. MANGROVE Foundation of India (MFI) அவர்களுடன் CIO சிறுவர்கள் இணைந்து 100க்கும் அதிகமான Mangrove மரக்கன்றுகளை MFI உடைய சதுப்புநில காடுகளில் நட்டனர். இதில் சிறப்பு விருந்தினர்களாக திரு.Dr.M.மாரியப்பன்(ஆராய்ச்சியாளர்,தமிழக அரசு, வனத்துறை) திரு. N.கோபி நைனார் (அறம்-திரைப்பட இயக்குனர்,சமூக ஆர்வலர்) திரு. சமீர் மற்றும் திருமதி.ஹாஜிரா சமீர்



*(SWOTT Founder/A.O) திரு.அப்துர் ரஹ்மான் (ஆசிரியர் -Morning News) ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*இதில் சகோதரர்.சர்புதீன் (தலைவர், கோனிமேடு கிளை -JIH)அவர்கள் சிறப்பு விருந்தினர்களையும், நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களை வரவேற்று, இயற்கை சார்ந்த பணியின் முக்கியத்துவம் குறித்து பேசினார். சகோதரி.கமருன்னிஸா (GIO பொறுப்பாளர் கோனிமேடு கிளை-JIH) அவர்கள் மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் என்ற தலைப்பின் முக்கிய அம்சங்களை எடுத்து கூறினார்.*

*மேலும் CIO மாணவி அஸ்மா ஜைனப் அவர்கள் பற்றியும் அதன் பணிகள் குறித்தும் விளக்கமளித்தார். CIO மாணவி ஹாஜிரா அவர்கள் மண்ணில் கைகள்..! இந்தியாவில் இதயங்கள்..! என்ற நாடு தழுவிய பரப்புரை பற்றியும் மரம் நடுதலின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளித்தார். இதில் அண்ணா பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.*



# தோட்டத்தில் CIO குழந்தைகள்...

*திருப்பூர் ஜமாஅத்தே இஸ்லாம் ஹிந்த் மகளிர் அணி சார்பாக, நேற்று காலை 10 மணி முதல் ஒரு 1.30 மணி வரை வெங்கடேஸ்வரா நகர் வட்டம் சார்பாக CIO மாணவர்களை தோட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது. இந்நிகழ்வில் CIO மாணவிகள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாகவும் உற்ச்சாகத்துடனும் கலந்து கொண்டனர். அங்கிருக்கும் மரங்களை பார்வையிட்டனர் பின்னர் தங்கள் கைகளால் மரங்களை பதியம்*



செய்தார்கள். மிகவும் மகிழ்ச்சியாக விளையாடி ஆனந்தம் அடைந்தார்கள். இந்நிகழ்வில் 15 மாணவிகள் கலந்து கொண்டனர்.

## மரக்கன்றுகள் அன்பளிப்பு...

26/01/1447 (22/07/2025) செவ்வாய்க்கிழமை கடையநல்லூர் கிளை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் வட்டம் மற்றும் CIO சார்பாக "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" பரப்புரையை முன்னிட்டு, கடையநல்லூர் காவல்நிலையம் சென்று பெண் காவலர்கள் தமிழ்செல்வி, வள்ளிமயில் ஆகியோரை சந்தித்து சமரசம், உதயதாரகை இதழ்கள் மற்றும் மரக்கன்றுகள் அன்பளிப்பு செய்யப்பட்டது; தொடர்ந்து கடையநல்லூர் நகராட்சி சென்று நகராட்சி சுகாதார ஆய்வாளர் சிவா அவர்களைச் சந்தித்து சமரசம் இதழ் மற்றும் மரக்கன்றுகள் அன்பளிப்பு செய்யப்பட்டது.



## ஓவியம் வரைதல்...

ஓடைக்குளம் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் CIO (Children Islamic Organisation) சார்பாக நாடு தழுவிய அளவில் நடைபெற்று வரும் "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" பரப்புரையின் ஓர் அங்கமாக, JIH-இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் ஓடைக்குளம் ஜும்ஆ பள்ளிவாசல் இமாமுமான மௌலவி ஆதம் அலி ஃபைஜி அவர்களின் தலைமையில் ராமநாதபுரம் ஓடைக்குளத்தில் 20/07/2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மாணவ, மாணவிகளின் நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் மரம் நடும் நிகழ்வு, சிறு சொற்பொழிவு, ஓவியம் வரைதல் ஆகியவை இடம்பெற்று, மொத்தம் 4 மரக்கன்றுகள் நடப்பட்டன. மரங்களை நட்டு அதன் பயன்கள், வளர்ப்பின் அவசியம், தேவையின்றி மரங்களை வெட்டுவதின் தீமைகள் குறித்து 3 மாணவ, மாணவிகள்: முஹம்மது காலித், தமினா, ஆதிரா ஆகியோர் சிறு உரை நிகழ்த்தினர். மேலும், ஓவியம் தீட்டுதல் நிகழ்வில் 11



மாணவ, மாணவிகள்: அஜிர் அஹமது, முஹம்மது காலித், அப்சல் கான், சபீர், சாயித், தமினா, ஆதிரா, சாபிகா, சாயிரா, சிரின், அதிபா ஆகியோர் பங்கேற்றனர். இவ்வாறு, நாடு தழுவிய பரப்புரை ஒடைக்குளத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

## மாணவ- மாணவிகள் உரை...

முஹமதியாபுரம், இராமநாதபுரம் பகுதியில் 19.07.2025 சனிக்கிழமை அன்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாடு தழுவிய அளவில் CIO (Children Islamic Organisation) சார்பாக நடைபெற்று வரும் "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" பரப்புரையை முன்னிட்டு, JIH-இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பில் முஹமதியாபுரத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் மரம் நடுதல், சிறு உரை, ஓவியம் தீட்டுதல் ஆகியவை இடம்பெற்றன.




மாணவ, மாணவிகளில் ரனிஸா "மரத்தினால் ஏற்படும் நன்மைகள்", சனா "மரம் நமக்கு நண்பன்", ஜென்ஸி "மரம் உயிரினங்களின் பாதுகாவலன்" என்ற தலைப்புகளில் உரையாற்றினர். மேலும், ஓவியம் தீட்டுதல் நிகழ்வில் இஃப்ரா, மஹதியா, சனா, ரனிஸா, ஆதில், யாசிர், ஹானியா, நஜ்வா, முஸம்மில், நிகல்யா, ஜஸ்மிதா அமீர் ஆகியோர் பங்கேற்றனர். அனைத்து மாணவ, மாணவிகளும் சேர்ந்து 10 மரக்கன்றுகளை நட்டனர். இவ்வாறு "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" பரப்புரை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

## மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து கலந்துரையாடிய CIO குழந்தைகள்!

மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து கலந்துரையாடிய CIO குழந்தைகள்! Children Islamic Organisation (CIO) எனும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்-ன் சிறார் அமைப்பின் கீழ், "மண்ணில் கைகள், இந்தியாவோடு இதயங்கள்!" என்ற தலைப்பில் கடந்த ஒரு மாதமாக சுற்றுச்சூழல் பாதுகாப்பை நோக்கி சிறப்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன. கோவை மாநகரிலும் இந்தப் பரப்புரை பலதரப்பட்ட நிகழ்வுகளுடன் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்தப் பரப்புரையின் ஒரு அங்கமாக பல்வேறு



முக்கியஸ்தர்களைச் சந்தித்து, பரப்புரையின் நோக்கம், செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடி, மரக்கன்றுகளும் குழந்தைகளால் பரிசாக வழங்கப்படுகிறது. இதனையொட்டி CIO சிறார்கள் குழுவாகச் சென்று கோவை மாவட்ட ஆட்சியர் திரு. பவன்குமார் ஜி. கிரியப்பனவரை IAS., அவர்களைச் சந்தித்தனர். அவரிடம், பரப்புரையின் முக்கியத்துவம், அதன் நோக்கம், குழந்தைகளின் பசுமை கனவு மற்றும் இந்த பிரச்சார இயக்கத்தின் உணர்வுப் பின்னணி குறித்து அவர்கள் மிக அன்போடு விவரித்தனர். மழலை மொழியில் ஆனால் தீவிர மனமோட்டத்துடன், குழந்தைகள் வழங்கிய கருத்துக்களை ஆட்சியர் பொறுமையுடனும், கவனத்துடனும் கேட்டுக் கொண்டார். அவருக்கு மரக்கன்றுகளும் பரிசாக வழங்கப்பட்டன.

சிறுவயதிலேயே சமூக அக்கறையுடன் செயல்பட விரும்பும் இந்தச் சிறார்களைப் பார்த்த அவர், CIO குழந்தைகளையும், CIO பணிகளையும் வெகுவாகப் பாராட்டினார்.

## ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை சார்பாக தர்பியா நிகழ்ச்சி...

கும்பகோணம் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்தின் கும்பகோணம் கிளை சார்பாக தர்பியா நிகழ்ச்சி இன்று (24/07/2025, வியாழக்கிழமை) காலை 10:30 மணி முதல் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் தலைமை தாங்கினார். முதல் அமர்வில் நிகழ்ச்சி நடத்தியவர் சகோதரர் ஹாஜா மாலிக், திருக்குர்ஆன் விரிவுரை மௌலவி அகமது கபீர் ஹஜ்ரத் (இமாம், நைல் நகர் மஸ்ஜித், கும்பகோணம்) அவர்கள் நிகழ்த்தினர், தலைமை உரை ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் வழங்கினார், "மாற்றம் இல்லையேல், முன்னேற்றம் இல்லை" என்ற தலைப்பில் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்தின் திண்டுக்கல் கிளை தலைவர் ஜனாப் சபீர் அஹமத்

அவர்கள் பவர் பாயிண்ட் விளக்கக்காட்சியுடன் உரையாற்றினார், மேலும் கேள்வி-பதில் நிகழ்ச்சி பங்கேற்பாளர்களுடன் நடைபெற்றது. முதல் அமர்வு 12:45 மணிக்கு முடிவடைந்து, லுஹர் தொழுகை மற்றும் உணவு இடைவேளை நடைபெற்றது. இரண்டாவது அமர்வு மதியம் 2:00 மணிக்கு சகோதரர் முகமது ரியாஸ் தலைமையில் தொடங்கியது. இதில் ஜனாப் முகமது யூனுஸ் அவர்கள் "ஜமாத்தின் நோக்கமும் நமது செயல்பாடும்" என்ற தலைப்பில் உரையாற்றினார், "இயக்கமும் இனிய உறவுகள்" என்ற புத்தகத்தின் அடிப்படையில் மௌலவி பி. நாசர் புகாரி அவர்களின் தலைமையில் புத்தக ஆய்வு நடைபெற்றது, இதில் சகோதரர் ஏ. ஹாஜா மாலிக் (அத்தியாயம் 1), சகோதரி ரஹ்மத்நிசா (அத்தியாயம் 2), சகோதரி எம். ஹசீனா ("இயக்க உறவுகள் - தவிர்க்க வேண்டியவை"), சகோதரர் சாதிக் பாட்ஷா ("இயக்க உறவுகள் - செய்ய வேண்டியவை") ஆகியோர் பங்கேற்றனர். தொகுப்புரை மௌலவி நாசர் புகாரி அவர்கள் வழங்கினார், நன்றி உரை சகோதரர் பி. எஸ். யூசுப் அவர்கள் நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் 80 க்கு மேற்பட்ட ஊழியர்கள், உறுப்பினர்கள் மற்றும் அபிமானிகள் கலந்து கொண்டனர்.





# இராமநாதபுரம் மதினா நகரில் மரம் நடுதல் நிகழ்ச்சி

இராமநாதபுரம் சிக்கல் மதினாநகர் JIH-ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் CIO (Children Islamic Organisation) சார்பாக நாடு தழுவிய அளவில் "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" என்ற தலைப்பில் பரப்புரை நடத்தப்பட்டது. பரப்புரையின் ஓர் பகுதியாக JIH-ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக மதினா நகர் ஜும்ஆ பள்ளிவாசல் இமாமும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினரும் ஆகிய ஆலிம் முஹம்மது ரபீக் அவர்கள் தலைமையில் சிக்கல் மதினா நகரில் 23.07.2025 புதன்கிழமை அன்று குழந்தைகளுக்கான சிறப்பு நிகழ்வுகள் நடைப்பெற்றன. இதில் மரக்கன்று நடுதல், சிறு உரை,

ஓவியம் வரைதல், கவிதை போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நாடு தழுவிய அளவில் நடைபெறும் பரப்புரையின் மையமாக இருந்த மரம் நடுதல் நிகழ்வின் போது மாணவர்களின் உரைகள் நிகழ்த்தப்பட்டன. பசுமையான இடங்களும் காடுகளும் பொழுதுபோக்கு, ஓய்வு மற்றும் சமூகக் கூட்டங்களுக்கான பகுதிகளை வழங்குவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றன, மேலும் உடல் மற்றும் மன நல்வாழ்வுக்கு பங்களித்து ஆரோக்கியமான சமூகங்களை உருவாக்குகின்றன. வெப்பநிலையை ஒழுங்குபடுத்துதல், இயற்கை பேரழிவுகளின் தீவிரத்தை குறைத்தல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளை நிலைப்படுத்துதல் மூலம் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதில் மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மரங்கள் குளிர்ச்சியை மட்டுமல்லாது தண்ணீரைச் சேமிக்கவும் உதவுகின்றன. “இயற்கையின் செழிப்பு மனிதனின் செழிப்பு; இயற்கையை நாமே அழிக்கிறோம் என்றால் அழிவது இயற்கை மட்டுமல்ல, நம் வாழ்க்கையும் தான்! இனியாவது திருந்துவோம்! மனிதவளம் காக்க இயற்கை வளம் பேணுவோம்! நிறைய மரக்கன்றுகளை நடுவோம்!




நெகிழியை முற்றிலுமாக தவிர்ப்போம்! நீர்நிலைகளில் கழிவுகளை கொட்டாமல் இருப்போம்! இயற்கை வளம் காப்போம், இன்பமாய் வாழ்ந்திடுவோம்!” என்ற செய்தியையும் மாணவர்கள் வலியுறுத்தினர். இந்நிகழ்வில் 28 மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

# மதுரை சட்டகல்லூரி முதல்வருடன் மதுரை CIO குழந்தைகள் - சந்திப்பு

மதுரை சட்டகல்லூரி முதல்வருடன் மதுரை CIO குழந்தைகள் சந்திப்பின் ஓர் பகுதியாக, “மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்” பரப்புரையின் கீழ் மதுரையில் பல்வேறு இடங்களில் குழந்தைகள் பேரார்வத்துடன் மரங்கன்று நடும் நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக 25.07.2025 வெள்ளிக்கிழமை அன்று மதுரை சட்ட கல்லூரி வளாகத்தில் மரம் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் பேராசிரியர் Dr. P. குமரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற



இந்நிகழ்ச்சியில் அவர் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு ஊக்கம் அளித்தார். முன்னதாக, பரப்புரையின் முக்கியத்துவம், அதன் நோக்கம், குழந்தைகளின் பசுமை கனவு, பிரச்சார இயக்கத்தின் உணர்வு பின்புலம் குறித்து மிகவும் பொறுமையுடனும் கவனத்துடனும் கேட்டுத் தெரிந்து கொண்டார். சிறு வயதிலேயே சமூக அக்கறையுடன் செயல்படும் சிறார்களை கண்டு மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகக் கூறி, CIO குழந்தைகளை வெகுவாக பாராட்டினார்.

## மக்கள் கருத்தை இஸ்லாத்திற்கு சாதகமாக மாற்றுவது

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துவரங்குறிச்சி கிளையின் மக்கள் கருத்தை இஸ்லாத்திற்கு சாதகமாக மாற்றுவது என்ற மிஷன் அடிப்படையில் "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" என்ற பரப்புரையை முன்னிட்டு மதுரை ஏபிள் கிட்ஸ் சிறப்பு பள்ளி (அறிவுத்திறன் குறைந்த மற்றும் மூளை முடக்குவாத குழந்தைகளுக்கான பள்ளி) வளாகத்தில் குழந்தைகள் தங்கள் கையில் மரக்கன்றுகளை நட்டு வைத்ததுடன், மரங்களைப்பற்றி புரிந்த விஷயங்களை பகிர்ந்து கொண்டார்கள் மற்றும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள்; அங்குள்ள ஆசிரியர்களுக்கு சமரசம், உதயதாரகை போன்ற இதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 35 குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. துவரங்குறிச்சியில் இருந்து சென்ற உறுப்பினர்கள் அந்த குழந்தைகளின் மகிழ்ச்சியை கண்டு உணர்ந்ததோடு, அங்குள்ள ஆசிரியர்களும் "முஸ்லிம்கள் இவ்வாறு சேவையுடன் பணியாற்றுவது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது" என்று தங்கள் கருத்தினை தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் துவரங்குறிச்சி கிளையின் உறுப்பினர்கள் சகோதரி ராபியா ஜன்னத், ஜீனத் நஸ்ரின் மற்றும் ஊழியர் அனீஸ் பாத்திமா கலந்து கொண்டனர்.



# பள்ளிகளுக்கு சந்திப்பு...

மண்ணில் கைகள்! இந்தியாவில் இதயங்கள் பரப்புரையை முன்னிட்டு (24.7.2025) உடுமலை கிளை மகளிர் அணி சார்பாக பள்ளிகளுக்கு சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது. 1.SSA நகராட்சி பள்ளி 2.SKP நகராட்சி பள்ளி 3.சதாசிவம் வீதி தொடக்க பள்ளி 4.நெல்லுக்கடை வீதி நகராட்சி பள்ளி இப்பள்ளிகளில் பரப்புரையின் நோக்கம் குறித்தும், மரம் நடுதலின் அவசியத்தை பற்றியும் ஆசிரியர்களிடமும், மாணவர்களுக்கும் விளக்கப்பட்டள்ளது. பல மாணவர்கள் ஆர்வமுடன் மரக்கன்றுகளை வாங்கிக் கொண்டனர். மரக்கன்றுகளை நல்ல முறையில் வளர்ப்போம் என்று நம்மிடம் தெரிவித்துள்ளனர். மேலும் இரு பள்ளிகளில் மரக்கன்றுகளை ஆர்வமுடன் மாணவர்கள் நட்டு வைத்தனர். அனைத்து ஆசிரியர்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது.



# CIO மாணவர்களுடன் மருத்துவர்கள் சந்திப்பு...



மண்ணில் கைகள்! இந்தியாவில் இதயங்கள்! பரப்புரையின் நோக்கமாக 24.07.25 அன்று நமது JIH உடுமலை கிளை மகளிர் அணி சார்பாக CLO மாணவர்களுடன் மருத்துவர்கள் சந்திப்பு நடைபெற்றது. சந்தித்த மருத்துவர்கள்: Dr. சவிதா MBBS, DGO (ஸ்ரீ சக்ரா Hospital), Dr. கவிதா MBBS, DGO (ரக்ஷா Hospital), Dr. வனஜா MBBS, MD, Dr. E. மஞ்சுளா MD, OG (Bharani Medical Centre). மருத்துவர்கள் அனைவரும் நமது CIO மாணவர்கள் பரப்புரையின் நோக்கத்தை அழகான முறையில் பேசினதை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டு மகிழ்ந்தனர். அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டதுடன்,



அங்கிருந்த செவிலியர்களும் மரக்கன்றுகளை ஆர்வமுடன் வாங்கி தங்கள் வீட்டில் வளர்ப்பதாக தெரிவித்தனர்.

# CIO - வின் மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்” தேசிய பிரச்சாரம் குழந்தைகளின் பேரணி

தஞ்சாவூர் இஸ்லாமிய குழந்தைகள் அமைப்பு- CIO சார்பாக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணியின் – தஞ்சாவூர் பொறுப்பாளர் பாத்திமா மற்றும் தன்ஸீலா ஆகியோர் தலைமையில் சிறப்பு குழந்தைகள் பேரணி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சாலிடாரிட்டி மாநில தலைவர் முகமது ரியாஸ், தஞ்சாவூர் மேயர் சண். ராமநாதன் மற்றும் சமூக ஆர்வலர் ஜலாலுதீன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றுக் கொண்டனர். நாடு முழுவதும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக பத்து லட்சம் மரக்கன்றுகளை நடும் இலக்கோடு தஞ்சையில் நடைபெற்ற பேரணி சின்ன அரிசிகார தெரு பீப்பிள் வெல்ஃபேர் சென்டரில் துவங்கியது. பெரிய சாலை ரோடு, சையது அலி பாபா தெரு, ஆட்டுமந்தை தெரு, மகர்நோம்பு சாவடி வழியாக மீண்டும் சின்ன அரிசிகாரத் தெருவில் உள்ள பீப்புள் வெல்பர் சென்டரில் நிறைவடைந்தப் பேரணியில் சுமார் 100 க்கும் மேற்பட்ட குழந்தைகள், இளைஞர், பொது மக்கள் பங்கேற்றனர். தஞ்சையில் உள்ள பள்ளிகள், பூங்காக்கள், போன்ற பொது இடங்களில் மரக்கன்றுகள் குழந்தைகள் மூலம் நடப்பட்டுள்ளது, மேலும் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.




# பூப்பந்து போட்டி...

சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு தஞ்சாவூர் சார்பாக இரண்டு நாட்கள் (26.07.2025 - 27.07.2025) ஃபஜர் தொழுகைக்கு வருவதற்கான ஊக்குவிப்பாக பூப்பந்து போட்டி நடத்தப்பட்டது. இதில் 11 நபர்கள் கலந்து கொண்டனர், முதல் 3 வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, மண்ணில் கைகள் இந்தியாவின் இதயங்கள் என்ற



பிரச்சாரத்தின் சிறுவர்கள் நடத்தும் பேரணியின் அமர்வில் தஞ்சாவூர் மேயர் அவர்களால் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்:

CIO - CHILDRENS ISLAMIC ORGANISATION திருப்பூர் சிறுவர்கள், குழந்தைகள் சார்பாக மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் Hands in soil hearts with INDIA என்ற மையகருத்தின் அடிப்படையில் நாடுதழுவிய பரப்புரை பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. 10லட்சம் மரகன்றுகள் நடுவதை இலக்காக கொண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதன் இறுதிகட்டமாக ஜூலை27 ஞாயிற்றுக்கிழமை குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பங்குபெறும் பேரணி நடைபெற்றது பசுமையினை பாதுகாக்கும் பேரணியாக நடைபெற்றது இதில் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் ஆர்வமாக பங்கு பெற்றனர் ஒரு மாதம் முழுவதுமாக பல இடங்களில் மரங்கன்றுகளை நட்டனர், பல சிறப்பு விருந்தினர்கள் அழைக்கப்பட்டு நிகழ்ச்சியின் மையகருத்தை எடுத்துரைத்தனர், பள்ளிகளில் அதிகமாக இதைபற்றி மற்ற மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது ஜூலை27, 2025 பேரணிக்காக பல ஏற்பாடுகள் CIO- சார்பாக மேற்கொள்ளப்பட்டது இப்பேரணியை மாமன்ற உறுப்பினர் A.பெனாசீர் Mc அவர்கள் துவங்கிவைத்தார்கள் பேரணியின் தலைமையாக ஜனாப். A. முகமது காசிம் அவர்கள் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த - திருப்பூர் முகாமி தலைமையில் பேரணி முன்னெடுக்க பெண்கள் பிரிவு த டா தலைமை நாஜிமா ஹம்சாபேகம் மற்றும் Cio பொறுப்பாளர் பர்வீன் ஆகியோர் சிறப்பாக நிகழ்ச்சியினை வடிவமைத்தார்கள் இது பசுமை பேசும் குழந்தைகளின் குரலாக




இருந்தது வரும் காலத்தில் மரங்களையும் இயற்க்கையை பாதுகாக்கும் விதமாக சமூகம் உருவாகும் என்பதில் எந்த ஐயமும் இல்லாத வண்ணமாக இந்த ஒரு மாத கால உழைப்பு அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைந்துள்ளது. இது பசுமை பேசும் குழந்தைகளின் குரலாக எப்போதும் ஒலிக்க வேண்டும் இந்த நிகழ்வை காவல்துறை சார்பாக அழகாக நடத்திகொடுத்தார் சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் பங்குபெறும் நிகழ்வாக இருந்தமையால் அதிகமான கவனம்

கொடுத்தார்கள், ஜமாஅத் ஊழியர்கள் உறுப்பினர்கள் ஆண்கள் பெண்கள் என அனைவரும் சிறந்த ஒத்துழைப்பு கொடுத்தனர்.

## 2500 த்திற்கும் மேற்பட்ட மரங்கன்றுகள் குழந்தைகளால் நடப்பட்டுள்ளன:



CIO மதுரை மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் பரப்புரை சார்பாக 2500 த்திற்கும் மேற்பட்ட மரங்கன்றுகள் மதுரை CIO குழந்தைகள் சார்பாக மதுரை மாநகரில் பள்ளி கூடங்கள், கல்லூரிகள், முதியோர், சிறார் இல்லங்கள், மதரஸாக்கள், கோவில், சர்ச், மசூதிகள், அரசு நிறுவனங்கள் என பல இடங்களில் குழந்தைகளால் நடப்பட்டுள்ளன. மேலும் இயற்கை வளத்தையும், மண் வளத்தையும் காக்க முன்வர வேண்டும் என வாய்ப்புள்ள இடங்களில் குழந்தைகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## மரங்களைப் பாதுகாக்க – ஆயிரக்கணக்கான குழந்தைகள் பங்குபெற்ற மாபெரும் பேரணி!

“மண்ணில் கைகள், இந்தியாவோடு இதயங்கள்” என்ற தலைப்பில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் -ன் குழந்தைகள் அமைப்பான Children Islamic Organisation (CIO) நாடு தழுவிய அளவில் பசுமை விழிப்புணர்வு பரப்புரையை நடத்தி வருகிறது.

இந்த பரப்புரையின் ஒரு பகுதியாக, கடந்த ஒரு மாத காலமாக கோவை மாநகரில் குழந்தைகள் பல்வேறு பகுதிகளில் மரக்கன்றுகள் நடுதல், விழிப்புணர்வு கண்காட்சிகள், சொற்பொழிவு நிகழ்வுகள், அதிகாரிகள் சந்திப்பு போன்ற நிகழ்வுகளில் ஈடுபட்டு வந்தனர்.

இப்பரப்புரையின் முத்தாய்ப்பாக, இன்று (ஜூலை 27, 2025) “மரங்களைப் பாதுகாக்க குழந்தைகளின் மாபெரும் பேரணி” கோவை கரும்புக்கடை

பகுதியில் ஆயிரக்கணக்கான குழந்தைகளோடு வெகு சிறப்பாக நடைபெற்றது.

கோவை வனத்துறை பாதுகாப்பு அதிகாரி திரு. பிரபு அவர்களும், கோவை குழந்தைகள் நல அதிகாரி திருமதி. ஹஃப்ஸா அவர்களும், கோவை கரும்புக்கடை துணை காவல் ஆய்வாளர் திரு. ஜோஸப் ஆகியோர் இணைந்து கொடி அசைத்து பேரணியை தொடங்கி வைத்தனர்.

பூங்கா நகர் பகுதியில் தொடங்கிய இந்த பேரணி, கோவையின் பல்வேறு தெருக்களில் ஊர்வலமாக பயணித்து, இஸ்லாமியா பள்ளி மைதானத்தில் வெற்றிகரமாக நிறைவு பெற்றது. பேரணி நிறைவு நிகழ்வின் முக்கிய தருணங்கள் குழந்தைகள் பசுமையை, மரத்தைப் பாதுகாக்க கோஷமிட்டவர்களாக, எதிர்கால இந்தியாவிற்கான நம்பிக்கையின் ஒளியாய் பேரணி நிறைவுப் பகுதியான மைதானத்தில் ஒருங்கிணைந்தனர்.




பேரணி நிறைவு நிகழ்வு CIO சிறுவர். அதீகுர் ரஹ்மான் அவர்களின் அழகிய கிராஅத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து சிறுவர். முஸம்மில் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இப்பேரணிக்கு தலைமை தாங்கி நடத்தித் தந்த CIO கோவை மாவட்ட தலைவர் சிறுமி. நபீலா கரம் அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். மேலும் கோவை வனப்பாதுகாப்புத் துறை அதிகாரி திரு. பிரபு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை பெருநகரத் தலைவர் ஜனாப். P.S.உமர் ஃபாரூக் சாஹிப் அவர்கள் சிறப்புரையாற்றினார். CIO தமிழ்நாடு மாநிலம் பொறுப்பாளர் ஆசிரியர். M சலீம் அவர்கள் உறுதிமொழி வாசிக்க பேரணியில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான குழந்தைகள் பசுமையைப் பாதுகாக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். “மண்ணில் கைகள், இந்தியாவில் இதயங்கள்” பரப்புரையின் கோவை பெருநகரப் பொறுப்பாளர் திருமதி. அணீஸ் பர்வீன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.



ஒரு பசுமையான எதிர்காலத்தின் வாசலாக, இந்த பேரணியில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் உற்சாகமாக பங்கேற்று, கோவை மாநகரில் குழந்தைகளால் நடத்தப்பட்ட மிகப்பெரிய சுற்றுச் சூழல் விழிப்புணர்வு நிகழ்வாக இப்பேரணி சிறப்பாக அமைத்து தந்தனர்என்றால் அது மிகையாகாது... எல்லாப்புகழும் இறைவனுக்கே!!

# ஓவியப் போட்டி...

26/7/25 மாலை மேட்டுப்பாளையத்தில் CIO வின் "மண்ணில் கைகள் இதயங்கள் இந்தியாவில்" பரப்புரையை முன்னிறுத்தி காட்டூர், மதினா நகர், மகாதேவபுரம், Rose Garden Nursery and Primary School என நான்கு இடங்களில் நடைபெற்ற ஓவியப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா Rose Garden Nursery and Primary School-ல் நடைபெற்றது. இவ்விழா CIO மாணவி ஷீரின் அலைனாவின் கிராத்துடன் துவங்கியது, தொடர்ந்து CIO மாணவர் முஹம்மது அஸ்வாக் தனது வரவேற்புரையால் அனைவரையும் வரவேற்றார். அதன் பின்னர் San Jose Matriculation Higher Secondary School முதல்வர் Sister Annies, Rose Garden Primary and Nursery School Correspondent Muhammad Waseel, Jamate Islami Hind Big City Secretary Sister Rabia ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் Sister Annies நாம் எந்த செயல்களை செய்தாலும் அதனை ஆன்ம சுத்தத்தோடு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தினார். வாழ்த்துரை கூறியவர்களுக்கு புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. பின்னர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மேட்டுப்பாளையம் வட்ட தலைவர் Dr. Suhail சிறுகதைகளையும் தாவரங்களின் மருத்துவ குணங்களையும் குறித்து சிறப்பு உரையாற்றினார். அதன் பின்னர் போட்டிகளில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு stationery items பரிசாக வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் வட்ட பொறுப்பாளர் மேட்டுப்பாளையம் சகோதரி ஆரிஃபா அவர்கள் தொகுத்து வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் குழந்தைகளும் பெற்றோர்களும் 120க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதுடன் மருத்துவ குணம் கொண்ட தாவரங்களை பற்றிய சிறிய கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியர்கள் அனைவரும் சிறப்புடன் செயலாற்றினார்கள்.

# பசுமையின் தூதர்கள் நடக்கத் தொடங்கிவிட்டார்கள்!




பசுமையின் தூதர்கள் நடக்கத் தொடங்கிவிட்டார்கள்! உலகிற்கு ஒரு பெரிய செய்தியைக் கூற மரங்களைப் பாதுகாக்க, இயற்கையை காக்க குழந்தைகள் நடக்க ஆரம்பித்துவிட்டார்கள்! மரங்களைப் பாதுகாக்க குழந்தைகளின் மாபெரும் பேரணி "மண்ணில் கைகள் இந்தியாவோடு இதயங்கள்" என்ற செய்தியோடு கோவையில் இனிதே ஆரம்பமானது. இந்த பேரணியை கோவை வனத்துறை அதிகாரி திரு. பிரபு, கோவை குழந்தைகள் நல அதிகாரி திருமதி அஃப்ஸானா, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை பெருநகரத் தலைவர் ஜனாப் P.S. உமர் ஃபாரூக் மற்றும் கோவை கரும்புக்கடை காவல் துணை ஆய்வாளர் திரு. ஜோஸப் ஆகியோர் இணைந்து கொடியசைத்து துவக்கிவைத்தனர். இது ஒரு பேரணி மட்டுமல்ல, இது எதிர்காலம் பேசும் ஒரு பசுமையான அரங்கேற்றம்!

# மரங்களின் முக்கியத்துவம்...

கடையநல்லூர் கிளை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் வட்டம் CIO சார்பாக சனிக்கிழமை 26.07.25 அன்று தென்காசியில் நடைபெற்ற அபிமானிகள் வகுப்பில் 28 பேர் கலந்து கொண்டனர். இதில் "மண்ணில் கைகள், இந்தியாவின் இதயங்கள்" என்ற பரப்புரையை முன்னிட்டு வகுப்பு நடைபெற்றது. நிகழ்ச்சி சகோதரி சக்கீலா அவர்கள் திருக்குர்ஆன் ஓதியதன்மூலம் தொடங்கப்பட்டது. தொடர்ந்து சகோதரி சமீமா அவர்கள் மரங்களின் முக்கியத்துவம் குறித்து ஹதீஸ்களைச் சொன்னார்; பின்னர் சகோதரி பானு அவர்கள் மரங்களின் பயன்கள், மரங்களை வெட்டுவதால் ஏற்படும் தீவிர விளைவுகள் மற்றும் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள மரங்கள் குறித்து சிறப்புரையாற்றினார்கள். அல்ஹம்துலில்லாஹ், இறுதியில் மதரசா குழந்தைகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி, அவை ஏன் நட்டல் வேண்டும் என்பதை எடுத்துரைத்தோம்; குழந்தைகள் ஆர்வத்துடன் மரங்களை நட்டு மகிழ்ச்சி வெளிப்படுத்தினார்கள்.

# "மண்ணில் கைகள்... இந்தியாவில் இதயங்கள்..."



திருப்பூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணி சார்பாக "மண்ணில் கைகள்... இந்தியாவில் இதயங்கள்..." என்ற தலைப்பில் ஜூன் 26 முதல் ஜூலை 26 வரை ஒருமாத காலம் நடைபெற்ற தேசிய அளவிலான பரப்புரை நிகழ்ச்சியின் நிறைவு விழாவை இன்று மாபெரும் பேரணியாக CIO மாணவ, மாணவிகள் நடத்தினார்கள். இப்பேரணியை காலை 9 மணியளவில் மாமன்ற உறுப்பினர் சகோதரி N. பெனாசிர் M.C அவர்கள் துவக்கி வைத்தார்கள். பேரணியின் நோக்கத்தை விளக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் CIO மாணவி ஹசானா அவர்கள் தெளிவாகவும் நன்றாகவும் பேட்டியளித்தார்கள். இப்பேரணிக்கு JIH மாநகரத் தலைவர் ஜனாப் முகம்மது காசிம் அவர்கள் தலைமை தாங்கி, JIH மகளிர் அணி நாஜிமா சகோதரி ஹம்ஸா பேகம் அவர்கள் பேரணியை வழிநடத்தினார்கள். இதில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணி ஊழியர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் ஆண்கள் வட்டத்தின் உறுப்பினர்கள், ஊழியர்கள், ஆதரவாளர்கள் என திரளாக கலந்து கொண்டு CIO மாணவச் செல்வங்களை நல்ல முறையில் ஊக்குவித்து வழிநடத்தினார்கள். பேரணிக்கு காவல்துறை அதிகாரிகள் சிறந்த பாதுகாப்பை வழங்கினார்கள். இறுதியாக, பேரணியில் கலந்து கொண்ட அனைவருக்கும் GIO பொறுப்பாளர் சகோதரி பெனாசிர் நிஷா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள். ஏக இறைவனின் மாபெரும் கிருபையால் இந்த பேரணி மிகச் சிறப்பாக நடைபெற்றது; இதில் 100-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.



# CIO மதுரை மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் பரப்புரை...

CIO மதுரை மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் பரப்புரை சார்பாக மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலக முதன்மை செயளாளர் மதுரை சட்டகல்லூரி முதல்வர் Dr.P.குமரன் ,மதுரை தெற்கு ரயில்வே பொறியியல் மேலாளர் அவர்களுடன் CIO குழந்தைகள் சந்திப்பு நடைபெற்றது. குழந்தைகளின் பசுமை கனவு , இயற்கை சிந்தனை, சிறுவயதில் சமூக அக்கரை போன்ற CIO குழந்தைகளின் செயல்பாடுகளை கேட்டறிந்து மனம் மகிழ்வதாக வெகுவாக பாராட்டினர்.





# மரகன்று நடுதல் மாணவ மாணவிகளின் விழிப்புணர்வு

இராமநாதபுரம் மக்கா நகர் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் CIO - Children Islamic Organisation சார்பாக நாடு தழுவிய அளவில் “மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்” என்ற தலைப்பில் பரப்புரை நடைபெற்று வருகின்றது. பரப்புரையின் ஓர் பகுதியாக JIH-ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக JIH ஊழியரும் மக்கா நகர் ஜும்ஆ பள்ளிவாசல் இமாம் ஆலிம் முஹம்மது ஜாஃபர் அவர்கள் தலைமையில் ராமநாதபுரம் மக்கா நகரில் 17/7/2025 வியாழக்கிழமை அன்று “மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்” மாணவ மாணவிகளின் நிகழ்வுகள் நடைபெற்றன. நடைபெற்ற நிகழ்வுகளில் மரகன்று நடுதல், சிறு உரை, ஓவியம் வரைதல், கவிதை போன்றவை இடம்பெற்றன. மரத்தின் நன்மைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் “மரமறுக்கும் மரங்களே - உன் தாயின் கருவிலே உன் தொப்புள் கொடி அறுந்திருந்தால் நீ தப்பியிருப்பாயா! அட சண்டாளா குடிநீரும் கிடைக்காதே அதையுமா மறந்துபோனாய்! மண் தழைக்க மழை! மழை தழைக்க மரம்

தேவைதானே! உனக்கு கொடுக்கும் அவைகள் உன்னிடம் என்னத்தைக் கேட்டது! நீ இல்லாமல் மரங்கள் வாழ்ந்துவிடும்! மரமில்லாவிட்டால் நீ மரித்துவிடுவாய்! நீ அழிந்தால் உன் சொந்தம் அழும், மரங்கள் அழிந்தால் வரும் சந்ததியே அழியும்! எச்சரிக்கை! நீ வெட்டுவது மரத்தையல்ல, வரும் சந்ததியின் நுரைஈரலையே வெட்டுகிறாய்! முடிந்தால் விதை! அல்லது விட்டுவிடு, பூ அறு! காயும் கனியும் கூட அறு! நிழலுக்கு ஒதுங்கிய நீ அதன் கழுத்தை அறுக்காதே!" என்ற கவிதை மொழியில் விழிப்புணர்வு நடைபெற்றது. இதில் 15 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

# மரம் நடுதல் விழிப்புணர்வு நிகழ்ச்சி...




ஊராம்பட்டியில் JIH-ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாடு தழுவிய அளவில் CIO - Children Islamic Organisation சார்பாக நடைபெறும் பரப்புரையை JIH-இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் சார்பாக "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. ஊராம்பட்டியில் நடைபெற்ற பரப்புரையில் JIH உறுப்பினரும் ஊராம்பட்டி பள்ளிவாசல் இமாம் அக்பர் இக்பால் அவர்களின் தலைமையில் மரங்கள் நடுதல் நிகழ்வுகள் மற்றும் மரங்கள் நடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து உரை நடைபெற்றன. பசுமையான இடங்களும் காடுகளும் பொழுதுபோக்கு, ஓய்வு மற்றும் சமூகக் கூட்டங்களுக்கான பகுதிகளை வழங்குவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றன, உடல் மற்றும் மன நல்வாழ்வுக்கு பங்களிக்கின்றன, ஆரோக்கியமான, மிகவும் ஒருங்கிணைந்த சமூகங்களை வளர்க்கின்றன. மேலும் வெப்பநிலையை ஒழுங்குபடுத்துதல், இயற்கை




பேரழிவுகளின் தீவிரத்தை குறைத்தல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளை நிலைப்படுத்துதல் மூலம் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதில் மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன, வலுவான மரப் போர்வையைக் கொண்ட சமூகங்கள் தீவிர வானிலை நிகழ்வுகளைக்

கையாளவும் உயிர்கள் மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கவும் உதவுகின்றன. இந்நிகழ்வில் 15 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

# மரம் நடுதல் விழிப்புணர்வு நிகழ்ச்சி..

மறவாய்க்குடி JIH-ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் CIO - children Islamic organisation சார்பாக நாடு தழுவிய அளவில் “மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்” என்ற தலைப்பில் பரப்புரை நடத்தப்பட்டு வருகின்றது. மறவாய்க்குடி இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டம் Jih-சார்பாக கடந்த 26.7.2025 சனிக்கிழமை அன்று நாடு தழுவிய அளவில் மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் என்ற பரப்புரையின் ஒரு பகுதியாக சிக்கல் பகுதியில் உள்ள மறவாய்க்குடியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் மறவாய்க்குடி பள்ளிவாசல் இமாம் சேக் முகமது ஆலிம் அவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நடைபெற்ற நிகழ்வு; 1.மரக்கன்று நடுதல் 2.ஓவியம் வரைதல் 3.சிற்றுரை.. 4.கவிதை பாடுதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மாணவர்களின் உரையில் மரங்கள் வெள்ளத்தைத் தடுக்கவும் உதவுகின்றன. மழைத்துளிகளைத் தடுத்து மழைநீரை மெதுவாக்குகின்றன, இதனால் மழைநீர் தரையை அடைவதற்கு முன்பு சிறிது ஆவியாகிவிடும். மரங்கள் தண்ணீரை உறிஞ்சி, அவற்றின் வேர்கள் மண்ணில் வேகமாக ஊடுருவ உதவுகின்றன. இதன் விளைவாக மேற்பரப்பு ஓட்டம் குறைந்து, அதிக நீர் சேமிப்பு ஏற்படுகிறது. பறவைகளுக்கு கூடு அமைக்க, விலங்குகளுக்கு உணவளிக்க, மரம் நடுவோம்! மரம் நடுவோம் மகிழ்வுடன் வாழ்வோம்! இந்த நிகழ்வில் 15 க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்த நிகழ்வில் மொத்தம் 15 மாணவ , மாணவிகள் கலந்து கொண்டார்கள்.



# மரக்கன்று நடுதல்...



சொக்க நாதன் பட்டி JIH-ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் CIO - children Islamic organisation சார்பாக நாடு தழுவிய அளவில் "மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்" என்ற தலைப்பில் பரப்புரை நடத்தப்பட்டு வருகின்றது. சொக்க நாதன் பட்டியில் சார்பாக கடந்த 25.7.2025 வெள்ளிக்கிழமை அன்று நாடு தழுவிய அளவில் மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் என்ற பரப்புரையின் ஒரு பகுதியாக மதுரை பகுதியில் உள்ள சொக்க நாதன் பட்டியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் சொக்க நாதன் பட்டி பள்ளிவாசல் இமாம் அப்துர் ரஹ்மான் அவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. சொக்கநாதன் பட்டியில் உள்ள அரசு பள்ளிக்கூடத்திற்கு சென்று தலைமை ஆசிரியரை சந்தித்து நடைபெறக்கூடிய பரப்புரையை பற்றி அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்களின் தலைமையில் பள்ளிக்கூடங்களில் மரம் நடுவிழா நிகழ்வு நடைபெற்றன. மாணவ மாணவிகள் பெரிதலும் ஆர்வமாக கலந்து கொண்டு மரங்களை நட்டார்கள். நடைபெற்ற நிகழ்வு; 1.மரக்கன்று நடுதல் 2.சிற்றுரை.. ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பசுமையான இடங்களும் காடுகளும் பொழுதுபோக்கு, ஓய்வு மற்றும் சமூகக் கூட்டங்களுக்கான பகுதிகளை வழங்குவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றன. இந்த இடங்கள் உடல் மற்றும் மன நல்வாழ்வுக்கு பங்களிக்கின்றன, ஆரோக்கியமான, சமூகங்களை வளர்க்கின்றன. வெப்பநிலையை ஒழுங்குபடுத்துதல், இயற்கை பேரழிவுகளின் தீவிரத்தை குறைத்தல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளை நிலைப்படுத்துதல் மூலம் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதில் மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மரங்கள் குளிர்ச்சியைத் தவிர, தண்ணீரைச் சேமிக்கவும் உதவுகின்றன. இந்த நிகழ்வில் மொத்தம் பெண்கள் மாணவ , மாணவிகள் என 20 நபர்கள் கலந்து கொண்டார்கள்.



# கடையநல்லூர் CIO சார்பாக மரம் நடும் நிகழ்ச்சி.

கடையநல்லூர் ஹிஜ்ரி 1447 ஸஃபர் மாதம் 4 (ஜூலை 30 2025) ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் குழந்தைகள் அமைப்பான CIO தேசியளவில் மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் என்ற மைய கருத்தில் சுற்றுச்சூழலை மையப்படுத்தி நாடுமுழுவதும் 10 இலட்சம் மரக்கன்றுகளை நடும் பிரச்சாரத்தை நடத்திவருகிறது. பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக கடையநல்லூர் CIO கிளையின் சார்பில் இன்று கடையநல்லூர், மங்களாபுரம் அல்அஸ்ஹர் பள்ளியில் மரம்நடும்பணியை குழந்தைகள் மேற்கொண்டனர்.. மரங்களின் பயன்கள் பற்றி, மரம் வளர்த்தலின் முக்கியத்துவம் பற்றிய சிறிய உரையுடன் ஆரம்பித்தோம்.. இது ஒரு சிறப்பான முன்னெடுப்பு என ஆசிரியப்பெருமக்கள் பாராட்டினர்... குழந்தைகள் ஆர்வமுடன் பங்கெடுத்தனர்.



# உடுமலை நிறைவு விழா குழந்தைகள் பேரணி...

உடுமலை ஜூலை 26 ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் குழந்தைகள் அமைப்பான CIO தேசியளவில் மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் என்ற மைய கருத்தில் சுற்றுச்சூழலை மையப்படுத்தி நாடுமுழுவதும் 10 இலட்சம் மரக்கன்றுகளை நடும் பிரச்சாரத்தை நடத்திவருகிறது. பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக உடுமலை CIO கிளையின் சார்பில் இயற்கை வளங்களை பாதுகாப்போம் என்ற முழக்கத்துடன் குழந்தைகள் கலந்து கொண்ட பேரணி அன்று (26:07:2025 சனிக்கிழமை) உடுமலையில் நடைபெற்றது. இந்த பேரணியை ஐயா .SI கிருஷ்ண மூர்த்தி அவர்களும், உடுமலைகிளை ஜமாஅத் தலைவர் சான் பாஷா அவர்களும் CIO கொடியை அசைத்து பேரணியை துவக்கி வைத்தனர். இந்த பேரணி நகரின் முக்கிய வீதிகளில் வளம் வந்தது நிகழ்வின் இறுதியாக ஒவ்வொரு குழந்தைகளும் ஒரு மரத்தை நட்டு அதை பராமரித்து வளர்க்க வேண்டும் என்று உறுதி மொழியோடு பேரணி நிறைவுற்றது. CIO என்பது 5 வயது முதல் 12 வயது வரை உள்ளவர்களை



நல்வழிப்படுத்தும் ஒரு அமைப்பாக அகில இந்திய அளவில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் மூலம் குழந்தைகளை நாளைய சிறந்த தலைவர்களாகவும், நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படக்கூடியவர்களாகவும் மாற்றுவதை இலக்காக கொண்டு செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



## பேரணி/ஓவிய போட்டி..

மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் என்ற தேசிய அளவிலான பரப்பரையை முன்னிட்டு ஜமா அத்தே இஸ்லாமி ஹிந்த் மங்களம் கிளை மகளிர் அணி சார்பாக பரப்புரை நிறைவு விழா நடைபெற்றது. 27/7/2025 ஞாயிற்றுக்கிழமை மதியம் 4 மணிக்குமங்கலம் மஸ்ஜிதுல் இக்லாஸ் வேட்டுவபாளையம் பகுதியில் Cio வின்பேரணி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து 5 மணி அளவில் கிராஅத்... ஜனாப் : ஹாபிழ் நிசாருத்தீன் (மஸ்ஜிதுல் இக்லாஸ் இமாம்) அவர்கள் கிராஅத் ஓதி துவங்கி வைத்தார். ஜனாப் : A அப்துல்வதூத் (jih மங்கலம் கிளை தலைவர்) அவர்கள் தலைமை உரை ஆற்றினார். 'இன்றைய சூழலில் பெற்றோர்களின் பொறுப்புகள்' என்ற தலைப்பில் ஜனாப் : நஜீர் ஹுசைன் (jih தென் மண்டல பொறுப்பாளர் அழைப்பியல் துறை) அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். ஜனாப் : S அப்துல் ரஷீத் (jih மங்கலம் கிளை செயலாளர்) அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து நன்றி உரை நிகழ்த்தி ஜமாஅத் அறிமுகம் மற்றும் பணிகள் குறித்து பேசினார். இறுதியாக பரப்புரையை முன்னிட்டு மங்கலத்தில் 5 பகுதியில் நடந்த ஓவிய போட்டிக்கான பரிசும் 80 சான்றிதழ்களும் Cio மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. இயற்கை தொடர்பான project மற்றும் கையெழுத்திட்டு மரம் வளர்ப்போம் என்ற உறுதிமொழி எடுத்தார்கள். இந்நிகழ்வில் Jih ஆண்கள் வட்டம்,





பெண்கள் வட்டம் Sio, மற்றும் ஆதரவாளர்கள் ஆர்வத்துடன் பங்களிப்பு செய்தார்கள். பின்பு டீ, Snaks மற்றும் துஆவுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

# குழந்தைகள் இஸ்லாமிய அமைப்பின் (CIO) மரம் நடும் பேரணி கும்பகோணத்தில் சிறப்பாக நடைபெற்றது...

கும்பகோணம், 31/07/2025: குழந்தைகள் இஸ்லாமிய அமைப்பு (Children's Islamic Organization - CIO) நடத்திய "மண்ணில் கைகள், இந்தியாவில் இதயங்கள்" எனும் தலைப்பில் அகில இந்திய மரம் நடும் பரப்புரை பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, இன்று (வியாழக்கிழமை) கும்பகோணத்தில் பேரணி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி விவரங்கள்: பேரணி: அல்-அமீன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் இருந்து பெரிய சர்ச், காமராஜ் ரோடு வரை காலை 10:00 மணிக்கு நடைபெற்றது. திருக்குர்ஆன் விரிவுரை: 11:20 மணியளவில் மௌலவி அகமது கபீர் மன்பையி அவர்களால் நடைபெற்றது. நிகழ்ச்சியை வழிநடத்தியவர்: ஜனாப் முகமது யூனுஸ் (ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், கும்பகோணம்). வரவேற்புரை: ஜனாப் எம். அப்துல் கலாம் ஆசாத் (ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், கும்பகோணம் கிளைத் தலைவர்). கொடியசைத்துப் பேரணியைத் தொடங்கியவர்கள்: Rev. டாக்டர் Sis. ஸ்டாரா (முதல்வர், செயிண்ட் ஆன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி). ஜனாப் எம்.என். முகமது ரஃபி (தாளாளர், அல்-அமீன் மேல்நிலைப்பள்ளி). ஜனாப் ஹாஜா மைதீன் டான் (அகாடமி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி). திரு. திருவடிக்குடில் சுவாமிகள் (ஜோதிமலை இறைப்பணி திருக்கூடம்). ஜனாப் எம்.எஸ். பஷீர் அகமது (செயலாளர், அல்-அமீன் மேல்நிலைப்பள்ளி). சகோதரர் எம். சலீம் (CIO மாநில ஒருங்கிணைப்பாளர், கோவை). சிறப்புரை: சகோதரர் எம். சலீம் (CIO மாநில ஒருங்கிணைப்பாளர்) தனது உரையில், "CIO கடந்த 20 ஆண்டுகளாக குழந்தைகளின் ஒழுக்கம், ஆளுமை மற்றும் சமூகப் பண்பாட்டை வளர்ப்பதற்காக பணியாற்றி வருகிறது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, ஜூன் 25 முதல் ஜூலை 25 வரை





10 லட்சம் மரக்கன்றுகள் நடும் இலக்குடன் அகில இந்திய அளவில் பரப்புரை நடத்தினோம். இன்றைய நிகழ்ச்சி அதன் தொடர்ச்சியாகும்” என்று குறிப்பிட்டார். பள்ளி மாணவர்களின் பங்கேற்பு: அல்-அமீன் மேல்நிலைப்பள்ளி, செயிண்ட் ஆன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, லிட்டில் ப்ளோவர் ஸ்கூல், டான் அகாடமி, ஸ்டார் மெட்ரிக் ஸ்கூல் மற்றும் மாதர் கிலாராக் மெட்ரிக் ஸ்கூல் ஆகியவற்றைச் சேர்ந்த 870 மாணவர்கள் பேரணியில் கலந்து கொண்டனர். கலந்து கொண்டோர்: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினர்கள், ஊழியர்கள், தன்னார்வலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்கள் பெருமளவில் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இளைஞர்களின் பங்கை வலியுறுத்தியதோடு, பல சமூகங்களை ஒன்றிணைத்த ஒரு சிறந்த சமூக நிகழ்வாக அமைந்தது. மேலும் விவரங்களுக்கு: Children’s Islamic Organization (CIO) – கும்பகோணம் கிளை. விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் CIO-வின் நன்றி!

# CIO அரங்க கூட்டம் - மதுரை.

CIO அரங்க கூட்டம் - மதுரை 02.08.25 மண்ணில் கைகள் இந்தியாவின் இதயங்கள் பரப்புரையின் ஒரு பகுதியாக பேரணியும் அதை தொடர்ந்து அரங்க கூட்டம் நடைபெற்றது சிறப்பு விருந்தினராக மூத்த வழங்கறிஞர். திரு T.லஜபதிபதிராய் ML சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளை மதுரை மகளிர் காவல் ஆய்வாளர் திருமதி R. சங்கீதா பூபாலன்குழந்தைகள் மனோவியல் நிபுணர் முனைவர்.ராணி சக்கரவர்த்தி Ph.D அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர் குழந்தைகளின் மரக்கன்றுகள் திட்டமும் சமூக ஆர்வமும் பன்ம பருவத்தின் செல்கணிணி கையில் சிக்கி கொள்ளாமல் மண்ணில் கைகள் இந்தியாவின் இதயங்கள் என்கிற பரப்புரை ஒரு சிறந்த முன்னெடுப்பு என பாராட்டினர் இதன் மூலம் நல்ல சமுக சிந்தனையுள்ள எதிர்கால இந்தியாவையும் வளம் நிறைந்தாக கட்டமைக்க முடியும் என பாராட்டினர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநில செயலாளர் (CIO) சகோ. M. சலீம் M.Sc அவர்கள் சிறப்புரையாற்றினார் குழந்தைகளின் ஆளுமை, ஒழுக்கம், சமூக பண்பாடு,



மேம்பட தொடர்ந்து பணியாற்றி வருகிறது இதன் ஒரு பகுதியாக இந்த பரப்புரையை (மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள்) நடந்தி வருவதாகவும் குறிப்பிட்டார். நிகழ்ச்சிக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை தலைவர் மௌலவி A முஹைய்தீன் குட்டி உமரி தலைமை தாங்கினார் மதுரை மகளிர் அணி பொறுப்பாளர். ஜனாபா .நஜ்மா அலி வாழ்த்துரை வழங்கினார் மதுரை மகளிர் அணி துணை பொறுப்பாளர் ஜனாபா .மெஹர் நிஷா நிகழ்ச்சியை வழிநடத்தினார் CIO மதுரை துணை பொறுப்பாளர் ஜனாபா . சப்னம் வரவேற்புரை நிகழ்தினார் CIO மதுரை பொறுப்பாளர் ஜனாபா. நூர் நிஷா பேகம் நன்றியுரையாற்றினார் குழந்தைகளின் உறுதிமொழி குழந்தைகளின் மௌன மொழிநிகழ்ச்சி ஓவிய போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசு தொகை என நிகழ்ச்சி சிறப்பாக நிறைவுற்றது.

# மரங்களை பாதுகாக்க CIO வின் மாபெரும் பேரணி மதுரை




மரங்களை பாதுகாக்க CIO வின் மாபெரும் பேரணி - மதுரை 2.08.25 அன்று மண்ணில் கைகள் இந்தியாவின் இதயங்கள் என்கிற தலைப்பில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் -ன் குழந்தைகள் அமைப்பான Children islamic organisation (CIO) நாடு தழுவிய பரப்புரையின் ஒரு பகுதியாக குழந்தைகளின் மாபெரும் பேரணி மதுரை கலெக்டர் அலுவலகத்தில் தொடங்கி - காந்தி அருங்காட்சியகம் வரை சிறப்பாக




நடைபெற்றது மதுரை அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் திருமதி R. சங்கீதா பூபாலன் அவர்கள் பேரணியை கொடியசைத்து துவங்கி வைத்தார் மரங்களை ..! இயற்கை வளங்களை ..!குழந்தைகளின் பசுமை கனவுகள்..! இயற்கை பாதுகாக்க...! விழிப்புணர்வு கோசங்கள் எழுப்பியவாறு எதிர்கால இந்தியாவின் நம்பிக்கை

ஒளியாய் குழந்தைகள் பேரணியின் நிறைவு பகுதியான அரங்கத்தில் ஒருங்கிணைந்தனர்.

## தலைமைத்துவ பயிற்சி முகாம்...

தேர்ந்தெடுக்கப்ட்ட உறுப்பினர் ஊழியர்கள் கலந்து கொள்ளும் இரண்டு நாள் தலைமைத்துவ பயிற்சி முகாம் (MDR) மாநில தலைமையகத்தில் ஆகஸ்ட் 2,3- 2025 (சனி-ஞாயிறு) நடைபெற்றது. மாநிலத் தலைவர் மௌலவி A.முஹம்மது ஹனிபா மன்பயீ அவர்கள் மற்றும் பல்வேறு ஆளுமைகள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள்.



## குழந்தைகளின் பேரணி...

மண்ணின் கைகள் இதயங்கள் இந்தியாவில் சிஐஓ 10 லட்சம் மரம் நடுவோம் நாடு தழுவிய பரப்புரை முன்னிட்டு இறுதி நிகழ்வாக தஞ்சாவூர் வட்டம் சார்பாக 27/7/2025 அன்று குழந்தைகளின் பேரணி நடைபெற்றது. இந்த நிகழ்விற்குச் சிறப்பு விருந்தினராக தஞ்சாவூர் மாண்புமிகு மேயர் சன் ராமநாதன் அவர்கள் கலந்து கொண்டார்கள். மேலும் சிறப்பு விருந்தினராக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் சாலிடாரிட்டி மாநிலத் தலைவர் சகோதர் முஹம்மது ரியாஸ் அவர்களும் கலந்து கொண்டார்கள். மற்றும் சமூக ஆர்வலராக கடந்த பத்தாண்டுகளாக மரம் நட்டு வளர்த்து பராமரிப்பதை தன்னுடைய வாழ்நாளில் ஒரு சேவையாக ஆக்கிக் கொண்டவர் சகோதரர் ஜமீல் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியின் தொடக்கமாக கிராஅத் உமர் அப்துல்லா ஓதித் துவங்க, சகோதரி தன்ஜீலா பானு அவர்கள் வழிநடத்த, சகோதரி பாத்திமா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சிறப்புரையாக மேயர் அவர்கள் குழந்தைகளிடம் குழந்தையாக உரையாற்ற, மேலும் மேயர் அவர்களுக்கு, மாநில தலைவருக்கு, சமூக ஆர்வலருக்கு சிறப்பு செய்தது மற்றும் குழந்தைகள் சார்பாக தென்ன மரக்கன்று மேயர் அவர்களுக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டது. சாலிடாரிட்டி சார்பாக போட்டியில் வெற்றி



பெற்ற மாணவ மாணவிகள் சர்டிபிகேட் மேயர் அவர்கள் வழங்கினர். பின்னர் கொடி அசைக்க பேரணி புறப்பட்டது. ஒரு மணி நேரம் நான்கு பள்ளி வாசல் ஏரியாவிற்கு குழந்தைகள் ஒரு மணி நேரமாக குதூகலமாக பேரணி சென்றார்கள். மேலும் அத்தர் பள்ளி வாசல் முன் குழந்தைகள் பேட்டி கொடுத்தார்கள் மற்றும் இறுதியாக குழந்தைகள் செய்து வந்த சாட் பற்றி, மரத்தைப் பற்றி பேசினார்கள். நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. அல்ஹம்துலில்லாஹ்.

# நிறைவு விழா...

மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் என்ற தேசிய அளவிலான பரப்பரையை முன்னிட்டு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மங்களம் கிளை மகளிர் அணி சார்பாக பரப்புரை நிறைவு விழா நடைபெற்றது. 27/7/2025 ஞாயிற்றுக்கிழமை மதியம் 4 மணிக்குமங்கலம் மஸ்ஜிதுல் இக்லாஸ் வேட்டுவபாளையம் பகுதியில் CIO வின்பேரணி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து 5 மணி அளவில் கிராஅத்... ஜனாப்: ஹாபிழ் நிசாருத்தீன் (மஸ்ஜிதுல் இக்லாஸ் இமாம்) அவர்கள் கிராஅத் ஓதி துவங்கி வைத்தார். ஜனாப்: A அப்துல்வதூத் (JIH மங்கலம் கிளை தலைவர்) அவர்கள் தலைமை உரை ஆற்றினார். ‘இன்றைய சூழலில் பெற்றோர்களின் பொறுப்புகள்’ என்ற தலைப்பில் ஜனாப்: நஜீர் ஹுசைன் (JIH தென் மண்டல பொறுப்பாளர் அழைப்பியல் துறை) அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். ஜனாப்: S அப்துல் ரஷீத் (JIH மங்கலம் கிளை செயலாளர்) அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து நன்றி உரை நிகழ்த்தி ஜமாஅத் அறிமுகம் மற்றும் பணிகள் குறித்து பேசினார். இறுதியாக பரப்புரையை முன்னிட்டு மங்கலத்தில் 5 பகுதியில் நடந்த ஓவிய போட்டிக்கான பரிசும் 80 சான்றிதழ்களும் CIO மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. இயற்கை தொடர்பான project மற்றும் கையெழுத்திட்டு மரம் வளர்ப்போம் என்ற உறுதிமொழி எடுத்தார்கள்.



இந்நிகழ்வில் JIH ஆண்கள் வட்டம், பெண்கள் வட்டம், SIO மற்றும் ஆதரவாளர்கள் ஆர்வத்துடன் பங்களிப்பு செய்தார்கள். பின்பு டீ, Snacks மற்றும் துஆவுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

# ஒருங்கிணைந்த சிறப்பு நிகழ்ச்சி...

ஒவ்வொரு காலண்டிலும் உறுப்பினர், ஊழியர்களை ஒருங்கிணைத்து JIH-இஸ்லாமிய சென்டர் ஊழியர்வட்டம் சார்பாக தர்பியா நிகழ்ச்சி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. அவ்வகையில் தற்போதுள்ள காலாண்டிற்கான தர்பியா நிகழ்ச்சியாக “நீங்கள் அல்லாஹ்விற்கு உதவியாளராக ஆகிவிடுங்கள்” எனும் மையக்கருத்தில் ராமநாதபுரம் ரமலான் நகரில் அனைத்து உறுப்பினர் ஊழியர்களுக்கு ஒருங்கிணைந்த தர்பிய நிகழ்ச்சி 6.8.2025 புதன்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4:30 மணி வரை நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்: இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கோவை மண்டல அமைப்பாளர் ஜனாப் : S. அப்துல் காதர் ஜெய்லானி அவர்கள் கலந்து கொண்டார்கள்.




தலைமை: இந்நிகழ்ச்சியை JIH-இஸ்லாமிய சென்டர் ஊழியர் வட்டம் நாஜீம் மற்றும் மண்டல அமைப்பாளர் ஜனாப் : கா. நஜீர் ஹுசைன் அவர்கள் தலைமையேற்று நடத்தி கொடுத்தார்கள். நிகழ்ச்சியின் துவக்கமாக கிராத் : மௌலவி ஷேக் அப்துல்லாஹ் தாஃவதி கிராஅத் ஓதி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து தலைமையுரை ஜனாப் :- K. நஜீர் ஹுசைன். பயிற்சி: பயிற்சிக்கான அம்சத்தில் உயிரோட்டத்தில் உள்ள நான்கு தலைப்புகளை உறுப்பினர் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு உரையாக கொடுக்கப்பட்டது. 1. மௌலவி சம்சுதீன் ஃபைஜி தலைப்பு: குர்ஆன் கூறும் இதயம். இதயம் நான்கு பண்புகளைக் கொண்டிருக்கும் 1.எந்த இதயம் தவறான நம்பிக்கைகள் இறை மறுப்பு இணைவைப்பு நயவஞ்சகம் போன்ற அனைத்திலிருந்து அப்பாற்பட்டதாய் தூய்மையானதாய் இருக்கும். 2. தன்னுடைய பிள்ளைகளுக்கு நேரிய வழியை காண்பிக்க கூடியதாய் இருக்கும். 3. நரகத்தின் பக்கம் இட்டுச் செல்கின்ற காமத்தில் இருந்தும் மன இச்சைகளிலிருந்தும் துப்புரவானதாய் அது இருக்கும். 4. அந்த இதயத்தின் அல்லாஹ்வைத் தவிர வேறு எதுவும் எவரும் இருக்க மாட்டார்கள் இதிலிருந்து இதயத்தை சீர்படுத்துவது எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து கொள்ளலாம். 2. மௌலவி ஆதம் அலி ஃபைஜி தலைப்பு: குர்ஆன் கூறும் இதயம். மகத்துவமிக்க குர்ஆனில் சில இதயங்கள் குறித்து முத்திரை ஏற்பட்ட

இதயங்கள் என்பதாக வர்ணிக்கப்பட்டுள்ளது அந்த இதயங்கள் மீது அல்லாஹ் முத்திரையிடுவதில்லை அதற்கு மாறாக அந்த இதயங்களை கொண்டவர்களின் தவறான செயல்களின் காரணமாகத்தான் அவற்றின் மீது முத்திரை இடப்படுகின்றது. 3. மௌலவி, அப்துல் மாலிக் ஸலாமி தலைப்பு: முஸ்லிம்களிடம் அறிவு தேடல் குறைந்தது ஏன்? 4. மௌலவி முஹம்மது ரஃபீக் தாஃவதி தலைப்பு: அழைப்பு பணிக்கு மொழி அறிவு அவசியம். மொழி என்பது பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின் மிக முக்கிய குறிப்பாக விளங்குவதோடு மட்டுமல்லாமல் ஆளுமை வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றுகின்றது கல்வி மற்றும் கலாச்சாரம் மொழியின் மூலமாக பாதுகாக்கப்படுகின்றன கல்வியை பத்திரிக்கை துறையை அரசியல், வியாபாரம், பொருளாதாரம் சர்வதேச தொடர்புகள் உட்பட அனைத்து துறைகளிலும் மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். காலை துவங்கப்பட்ட முதல் அமர்வில் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இரண்டாம் அமர்வு: மதியம் லுஹர் தொழுகை மற்றும் உணவிற்கு பிறகு இரண்டாம் அமர்வாக தர்பியா நிகழ்ச்சியின் 'அசல் பகுதியான' "இரண்டு ஆண்டு திட்டமும் நமது செயல்பாடும், இலக்கும் ஒரு பார்வை!" என்று ஒவ்வொருவரும் சுய திட்டம் சமர்ப்பித்தல் தலா 4' நிமிடம் எடுத்துக்கொண்டு அவரவர்கள் பகுதிகளில் செயல்திட்டத்தின் அடிப்படையிலும் இலக்கின் அடிப்படையிலும் என்ன பணிகள் நடந்து வருகின்றது என்பதை சுய ஆய்வின் மூலமாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று முடிவு செய்து இஸ்லாமிக் சென்டர் ஊழியர் வட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் வருகை தந்த உறுப்பினர் ஊழியர்கள் அவரவர்கள் செய்கின்ற பணி செய்யப் போகின்ற பணி ஆகியவற்றை குறித்து பேசப்பட்டது. சிறப்புரை; இறுதியாக தர்பியா நிகழ்ச்சியின் மையக்கருத்தான "நீங்கள் அல்லாஹ்விற்கு உதவியாளராக ஆகிவிடுங்கள்" எனும் தலைப்பில் சிறப்பு விருந்தினராக வருகை




புரிந்த ஜனாப் ;- S. அப்துல் காதர் ஜெய்லானி (கோவை மண்டல அமைப்பாளர் D.O) அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். நடைபெற்ற இந்த தர்பியா நிகழ்ச்சியை அழகான முறையில் தொகுத்து வழங்கினார் ஆலிம், அபுபக்கர் தாஃவதி அவர்கள். இறுதியாக மௌலவி, அப்துல் மாலிக் ஸலாமி அவர்களின்

நன்றியுரை மற்றும் துஆவுடன் நிகழ்ச்சி சிறப்பாக நிறைவடைந்தது.

# தீன் நகரில் பரப்புரை நிறைவு விழா

மண்ணில் கைகள் இந்தியாவின் இதயங்கள் பரப்புரை நிறைவு விழா 07.08.2025 தீன் நகரில் நடைபெற்றது. இதில் தீன்நகர் துணை இமாம் கிராஅத் ஓதி துவங்கி வைத்தார் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியரும் தீன் நகர் இமாம் மௌலவி ஜாபர் சாதிக் மன்பஈ தலைமையில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளரும் மதுரை இஸ்லாமிக் சென்டர் துணை செயலாளருமான நசீர் ஹுசைன்



அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். மாறிவரும் சூழலில் பெற்றோர்களின் பொறுப்பு எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுவதற்கு முன், முதலில் அவர்கள் அந்த நற்பண்களை கடை பிடிப்பவர்களாக இருக்க வேண்டும். பெற்றோர்கள் தான் குழந்தைகளுக்கு ரோல் மாடல். அவர்கள் என்ன செய்கிறார்களோ, அதைப் பார்த்துதான் அவர்களுடைய பழக்க வழக்கங்களும் அமையும். நல்ல குழந்தைகளாக வளர்க்க நினைப்பவர்கள், முதலில் நல்ல பெற்றோராக இருக்க வேண்டும். குழந்தைகள் செய்யும் நல்ல செயல்களை வாய்விட்டு பாராட்ட வேண்டும். பாராட்டுக்கு குறைவே இருக்க கூடாது. சில தவறுகளை செய்யும்போது, கவனமாக அந்த தவறால் என்ன பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தைச் சொல்லி, இனி அவ்வாறு செய்யாமல் இருக்க கற்றுக்கொடுக்க வேண்டும். இன்றைய தலைமுறையினர் குற்றச் செயல்களும் சமூகத்தின் மீது இழைக்கப்படும் குற்றச்சாட்டுகளும் அதற்கான தீர்வுகளும் பெற்றோர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகளும் என்ற அடிப்படையில் உரை நிகழ்த்தினார் இதில் ஆண்கள் பெண்கள் என 80 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# ரிஃபா சேம்பர் ஆஃப் காமர்ஸ் துவக்க விழா நிகழ்ச்சி

கும்பகோணம் ரிஃபா சேம்பர் ஆஃப் காமர்ஸ் துவக்க விழா நிகழ்ச்சி நாள்: 10.08.2025 (ஞாயிற்றுக்கிழமை) நேரம்: காலை 7:00 மணி முதல் 9:30 மணி வரை இடம்: LILAC HOTEL கும்பகோணம் ரிஃபா சேம்பர் ஆஃப் காமர்ஸ் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி திட்டமிட்டபடி, காலை 7:30

மணிக்கு துவங்கப்பட்டது. மௌலவி முகமது இஸ்மாயில் அவர்கள் கிராத் ஓதிப், நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அதன்பின், பங்கேற்ற அனைவரும் தங்களது Self Introduction வழங்கினர், இதன் மூலம் ஒருவருக்கொருவர் நெருக்கமாக அறிமுகமானனர். நிகழ்ச்சியை ஜனாப் முஹம்மது யூனுஸ் அவர்கள் திறம்பட வழிநடத்தினார். “RIFAH – ஏன்? எதற்கு?” என்ற தலைப்பில், தமிழ்நாடு RIFAH தலைவர் ஜனாப் யூனுஸ் சேட் அவர்கள் விரிவாக உரையாற்றினர். திருச்சியில் இருந்து வந்திருந்த விருந்தினர்கள், திருச்சி ரிஃபா சேம்பர் ஆஃப் காமர்ஸ் சார்பில் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அவர்களில் சிலர், திருச்சி ரிஃபா சேம்பர் மூலம் வணிக வாய்ப்புகள் கிடைத்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். திருச்சி ரிஃபா சேம்பர் ஆஃப் காமர்ஸ் தலைவர் ஜனாப் ஷாஜகான் அவர்களும், செயலாளர் காஜா மைதீன் அவர்களும் தங்களது அனுபவங்களை விரிவாக பகிர்ந்துகொண்டனர். நிறைவுரை ரிஃபா சேம்பர் ஆஃப் காமர்ஸ் தமிழ்நாடு பிரசிடெண்ட் ஜனாப் யூனுஸ் சேட் அவர்கள் உரையாற்றினார். செயற்குழு உறுப்பினர்கள் நியமனம்: ஜனாப் முகமது சித்தீக் – மாஸ் மொபைல், ஜனாப் ராஜா முஹம்மது – ஆற்காடு என்டர்பிரைசஸ், ஜனாப் ஆசிக் இஸ்மாயில் – ஆடிட்டர், ஜனாப் சகாபுதின் – நூரா டிராவல்ஸ், ஜனாப் ஹாஜா மாலிக் – லீசாஃப் எண்டர்பிரைசஸ், ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் – சுமையா ரெஸ்டாரன்ட், ஜனாப் முகமது யூனுஸ் – அஹமது ஸ்டீல் பேப்ரிகேஷன். நன்றி உரையை, ஜனாப் ஹாஜா மாலிக் அவர்கள் வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் மொத்தம் 53 நபர்கள் பங்கேற்றனர். அனைவரும் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டு, “கும்பகோணம் ரிஃபா சேம்பர் ஆஃப் காமர்ஸ் தொடர்ந்து செயல்பட வேண்டும், நாங்கள் ஆதரவளிக்கிறோம்” என்று உறுதி தெரிவித்தனர். நிகழ்ச்சி நிறைவில், காலை சிற்றுண்டி அனைவருக்கும் வழங்கப்பட்டது.

## தலைமைத்துவ பயிலரங்கம்...




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – கோவை மண்டலம் ஊழியர் வட்டப் பொறுப்பாளர்களுக்கான இரண்டு நாள் தலைமைத்துவ பயிலரங்கம் இன்று (09 ஆகஸ்ட் 2025) சிறப்பாக நடைபெற்று



வருகிறது. இந்நிகழ்வில் ஜமாஅத்தின் தலைவர்கள் மற்றும் இஸ்லாமிய அறிஞர்கள்தலைமைத்துவ திறன்கள் மற்றும் சமூகப் பணியின் முக்கியத்துவத்தை சிறப்பு கருத்துரைகளாக வழங்க இருக்கின்றனர்..

## இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பும் (Islamophobia) முஸ்லிம்களின் கடமையும்...



இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பும் முஸ்லிம்களின் கடமையும் எனும் தலைப்பில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது (Islamophobia) ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளையின் சார்பாக 08.08.2025 வெள்ளிக்கிழமை மக்ரிப் தொழுகை முதல் இஷா தொழுகை வரை பூரா மஸ்ஜிதில் அல்லாஹ்வின் கிருபையால் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கமாக பூரா மஸ்ஜித் இமாம் மௌலவி உவேஸ் அஹமத் மாதனி கிராத் ஓதினார். பூரா மஸ்ஜித் தலைவர் ஜனாப் ஜாவித் பாஷா தலைமை தாங்கினார். டாக்டர் முஹையுதீன் MBBS, MS,MCH,(uro) அவர்கள் நூஹ் நபி காலத்தில் இருந்து இன்று வரை இஸ்லாத்திற்கு எதிரான பிரச்சாரம் அதை தீர்ப்பதற்கு நபிமார்கள் வருகை மற்றும் நாம் செய்ய வேண்டிய பணிகள் குறித்து வரலாற்று பிண்ணனி உடன் விளக்கமாக எடுத்துரைத்தார். நிகழ்ச்சியை மௌலவி இஸ்மாயில் ஃபலாஹி வழி நடத்தினார். இறுதியாக துவா உடன் நிறைவுற்றது. எல்லா புகழும் இறைவனுக்கே.

## பேராசிரியருக்கு வாழ்த்துக்கள்...

பேராசிரியருக்கு வாழ்த்துக்கள் தகைசால் விருது பெற இருக்கும் முஸ்லிம் லீக் அகில இந்திய தலைவர் பேராசிரியர் K M காதர் முகைதீன் அவர்களை 13.08.2025 புதன்கிழமை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் ஜனாப் V S முஹம்மது அமீன் மாநிலச் செயளாலர்கள் ஜனாப்



S N சிக்கந்தர் ஜனாப் S.சாகுல் ஹமீது ஆகியோர் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள். தகுதியானவருக்கு தகுதியான விருது வழங்குவதில் எங்களுக்கு பெரு மகிழ்ச்சி என்று பேராசிரியர் அவர்களிடம் கூறப்பட்டது. மேலும் சமரசம் இதழில் இடம்பெற்ற பேராசிரியர் அவர்களின் கட்டுரை குறித்தும் அறிமுகம் செய்து சமரசம் இதழ் மற்றும் இஸ்லாமிய நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## சுதந்திர தின சிறப்பு நிகழ்ச்சி ஜமாஅத் மகளிர் அணியினர் பங்கேற்பு

79 வது சுதந்திர தின சிறப்பு நிகழ்ச்சி மகளிர் அணியினர் பங்கேற்பு உடுமலை 15.08.2025 வெள்ளிக்கிழமை SSA சாதிக்நகர் அரசுப் பள்ளியில் சுதந்திர தின விழா நடைப்பெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்கள் சுதந்திர தின நிகழ்ச்சியை தலைமை ஏற்று நடத்துமாறு ஜமாஅத் மகளிர் அணியினருக்கு அழைப்பு கொடுத்திருந்தார்கள். அவர்களின் இந்த அழைப்பை ஏற்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணியினர் கலந்துகொண்டு சுதந்திர தின நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர். நிகழ்ச்சியில் உடுமலை ஜமாஅத் மகளிர் அணி தலைவி சகோதரி A.மெஹராஜ் அவர்கள் ஒழுக்கமே உண்மையான சுதந்திரம் என்ற தலைப்பிலும், ஜமாஅத் ஊழியர் வட்ட பொறுப்பாளர் சகோதரி ஆயிஷா அவர்கள் சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்ட முஸ்லிம் வீரர்கள் என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். அதன் பிறகு மாணவ மாணவிகளுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்பட்டது. இந்த சிறப்பான நிகழ்வில் உடுமலை கம்யூனிட்டி ஆர்கனைசர் மணிமேகலை, நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் மகளிர் உதவி குழு உறுப்பினர்கள், ஜமாஅத்தின் ஊழியர்கள், ஆதரவாளர்கள், GIO உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து



கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் உடுமலை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் இனிப்புகள் மற்றும் சமரசம், உதய தாரகை பத்திரிகைகள் வழங்கப்பட்டது.

# சங்கமம் வட்டியில்லா சொசைட்டி அறிமுக நிகழ்ச்சி

ஞாயிறு மாலை ஹிதாயத்துல் இஸ்லாம் பள்ளிக்கூடத்தில் வைத்து கடையநல்லூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிளை சார்பாக சங்கமம் வட்டியில்லா சொசைட்டி அறிமுக நிகழ்ச்சி ஜமாஅத்தின் கிளைத் தலைவர் ஜனாப் K. பீர் முஹம்மது அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் துவக்கமாக ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினர் சகோதரர் அப்துல் ரஹ்மான் அவர்கள் திருக்குர்ஆன் வசனங்களை ஓதி துவக்கி வைத்தார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல பொறுப்பாளர் மௌலவி K.A. அஹ்மத் முஹ்யித்தீன் ஃபைஜி வரவேற்புரை நிகழ்த்தினார்கள். தென்காசி மாவட்ட அரசு காழி & ஃபைஜுல் அன்வார் அரபிக் கல்லூரி முதல்வர் மௌலவி A Y முஹ்யித்தீன் ஃபைஜி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். சங்கமம் விருதுநகர் கிளை மேனேஜர் S. அப்துஸ்ஸமது அவர்கள், சங்கமம் மல்டி ஸ்டேட் கோ-ஆப்பரேட்டிவ் கிரிட் சொசைட்டியின் இயக்குனர் M. ஷாகுல் ஹமீது அவர்கள், சங்கமம் மல்டி ஸ்டேட் கோ-ஆப்பரேட்டிவ் கிரிட் சொசைட்டியின் சேர்மன் N. அமானுல்லா MCA, M. Tech, சங்கமம் செயல்பாடுகள் அதன் பயன்கள் பற்றி உரை நிகழ்த்தினார்கள். இன்னும் சங்கமம் பற்றிய கேள்விகளுக்குத் தெளிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டது. இறுதியாக் ஜஃபருல்லாஹ் நன்றி உரை நிகழ்த்தினார்.




இந்நிகழ்ச்சியை முஹம்மது ரில்வான் சிறப்பாக வழி நடத்தினார். நிகழ்வில் சுமார் 100க்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டார்கள்.



# மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் CIO பரப்புரையின் நிறைவு விழா

*20/02/1447 (15/08/2025) வெள்ளிக்கிழமை மாலை கடந்த ஜூன் 25 முதல் மண்ணில் கைகள் இந்தியாவில் இதயங்கள் CIO பரப்புரையின் நிறைவு விழா கடையநல்லூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிளை அலுவலகத்தில் நடந்தது. மசூது தைக்கா நர்சரி பள்ளி தலைமை ஆசிரியை ஜனாபா ரசூல் பீவி தலைமை தாங்கி விழாவை சிறப்பித்தார்கள். GIO மாணவி ஜஸீனா வின் இனிய கிராஅத்துடன் நிகழ்ச்சி துவங்கியது. குழந்தைகளின் கவிதை, சிறிய உரை, திருக்குர்ஆன் வசனங்களுடன் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடந்தது. ஓவியப்போட்டியில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு சான்றிதழும், புத்தகங்களும் அன்பளிப்பு செய்து தலைமை ஆசிரியை வாழ்த்துக்களைத் தெரிவித்தார். வரும் காலங்களில் மரங்களை நட்டுப் பராமரிப்பதாகக் குழந்தைகள் உறுதிமொழி எடுத்தனர். இந் நிகழ்ச்சியின் இறுதியில் சகோதரி ஆபிதா நன்றியுரை நிகழ்த்தினார்.*




# வெற்றியின் பக்கம் வாருங்கள் சாலிடாரிட்டி தெருமுனைப் பிரச்சாரம்

*ஆகஸ்ட் 16/2025 சனிக்கிழமை அன்று உடுமலை கிளை சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு சார்பில் மாலை 4 மணியளவில் சாதிக்நகர் பகுதியில் மக்களை “வெற்றியின் பக்கம் வாருங்கள்” என்ற மையக்கருத்தில் தெருமுனைக் கூட்டம் நடைப்பெற்றது. இந்த கூட்டத்திற்கு உடுமலை சாலிடாரிட்டி கிளைத் தலைவர் சகோதரர் ஜஹாங்கீர் அவர்கள் தலைமை தாங்கினார். ஜமாஅத் கிளைத் தலைவர் ஜனாப் சான் பாட்ஷா அவர்கள் முன்னிலை வகித்தார். சாலிடாரிட்டி மாநில ஆலோசனை குழு உறுப்பினரும் கிளைச் செயலாளருமான சகோதரர் ஷாநவாஸ் அவர்கள் திருமறை வசனங்களை ஓதி நிகழ்ச்சியை துவக்கினார். சாலிடாரிட்டி கோவை மண்டல பொறுப்பாளர் ஹபீப் ரஹ்மான் தலைமையுரையாற்றினார். அதன் பிறகு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளர் S.A.K. ஜெய்லானி அவர்கள் வெற்றியின் பக்கம் வாருங்கள் என்ற மையக் கருத்தில் சிறப்புரையாற்றினார். உரையின் கருத்தாக இறைவனின் மீது முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும்.*



அந்த நம்பிக்கை நமது செயல்களில் மிளிர வேண்டும். அடிப்படை கடமையான தொழுகையை முழுமையாக கடைபிடிக்க வேண்டும். தொழுகைதான் இறைவனுக்கும் நமக்குமான நெருக்கத்தை அதிகரிக்கும் அந்த இறைநெருக்கம் தான் நம்மை வெற்றியின் பக்கம் அழைத்துச்செல்லும் என்ற மையக் கருத்தில் உரை அமைந்திருந்தது. இந்த கூட்டத்தில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மேலும் அந்தப் பகுதி பொதுமக்கள் சுமார் 50 க்கும் மேற்ப்பட்டவர்கள் தங்களது இல்லங்களின் முன்பும், வீட்டு மாடிகளில் நின்று கொண்டும் உரையை கேட்டனர். இறுதியாக சாலிடாரிட்டி கிளை தலைவர் ஜஹாங்கீர் நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது.



# ராபிதத்துல் உலமா...

ராபிதத்துல் உலமா ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பத்தூர் கிளை சார்பாக உலமாக்கள் மற்றும் முத்தவல்லிகள் முக்கிய பிரமுகர்கள் சந்திப்பு நிகழ்ச்சி 16.08.2025 சனிக்கிழமை நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மௌலவி A.முஹம்மது ஹனிபா மன்பயீ (மாநில தலைவர் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு). அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் 45க்கு அதிகமானவர் கலந்து கொண்டனர். இறுதியில் கேள்வி பதில் நிகழ்ச்சி நடைபெற்றது. கலந்து கொண்ட அனைவருக்கும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பத்தூர் கிளை சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# கல்வி உதவி & வழிக்காட்டுதல் வழங்கும் நிகழ்ச்சி

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH), பாலக்கரை வட்டம் சார்பில் கல்வி உதவி & வழிக்காட்டுதல் வழங்கும் நிகழ்ச்சி 20.08.2025 அன்று இரவு 7.30 மணிக்கு காஜா பேட்டை பென்ஷனர் மஸ்ஜித்தில் நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், திருச்சி கிளைத் தலைவர் முனைவர். A. ஹஜ் மொய்தீன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு




சிறப்புரை ஆற்றினார். அவர் பேசுகையில், “மாணவர்கள் கல்வி கற்பதுடன், ஒழுக்கத்தையும் பேண வேண்டும். இப்பகுதியில் வாழும் மாணவர்கள் கல்வி கற்று உயர்ந்த இடத்திற்கு செல்ல வேண்டும். அதே நேரத்தில் நற்பண்புகள் கொண்ட மனிதர்களாக உருவாக வேண்டும். இதில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளை நல்வழிப்படுத்த வேண்டிய முதல் பொறுப்பு பெற்றோர்களுக்கு உண்டு. பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக அவர்கள் திகழ வேண்டும்.” என்று அறிவுறுத்தினார்.



அதைத்தொடர்ந்து, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய குடும்பத்தைச் சார்ந்த 51 மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. இதில் தாய் தந்தையை இழந்து பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கும் மாணாக்கர்களும் அடங்குவர்.ஜமாஅத் தொடர்ந்து அப்பகுதி மக்களிடையே கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், பல வகைகளில் உதவிகள் செய்து வருகிறது. இந்நிகழ்ச்சியில், ஜமாஅத் திருச்சி கிளைச் செயலாளர்கள் மரு. சேக் மொய்தீன், முனைவர். அப்துல் ரஜாக், ஜனாப். நவாஸ்கான், முனைவர். முஹம்மது ரஃபிக், ஜமாஅத் ஆதரவாளர்கள் ஹாஜி. முஹம்மது யூனுஸ், முனைவர். அனீஸ் அஹமது, முனைவர். ஹிதாயத்துல்லாஹ் மற்றும் காஜாப் பேட்டை பென்ஷனர் மஸ்ஜித் இமாம் மௌலவி. முஹம்மது இக்ரிமா, தலைவர் ஜனாப். அம்ஜத் கான், செயலாளர் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மேலும், மாணவ மாணவிகள், பெற்றோர்கள் என 70 க்கும் மேற்ப்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சி ஏற்பாட்டினை சகோ. பக்கீர் முஹம்மது தலைமையில் பாலக்கரை ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தினர். வல்ல இறைவன் நம் பணிகளை ஏற்றுக் கொள்வானாக! இம்மையிலும் மறுமையிலும் அளப்பரிய கூலியை வழங்குவானாக!

# சுதந்திர தினத்தில் தியாகிகளை நினைவு கூர்ந்த குழந்தைகள்...




சுதந்திர தினத்தில் தியாகிகளை நினைவு கூர்ந்த குழந்தைகள். நீலகிரி மாவட்ட GIO சார்பாக 79 வது சுதந்திர தின சிறப்பு நிகழ்ச்சி (சுதந்திர தினத்தன்று 15:08:2025) குன்னூரில் நடைபெற்றது. இந்திய வரலாற்றில் சுதந்திரத்திற்காக பாடுபட்ட முன்னோர்களின் வரலாறுகளை குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் அடிப்படையில் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, மற்றும் இந்திய சுதந்திரத்திற்காக உழைத்த தியாகிகளின் உருவத்தை நினைவில் வைக்க வேண்டும் என்னும் அடிப்படையில் மாறுவேட போட்டியும் நடைபெற்றது. இதில் ஏராளமான குழந்தைகள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். மேலும் அனைத்து போட்டிகளிலும் தங்களது திறமையை வெளிப்படுத்தினர் குழந்தைகள். நிகழ்ச்சியில் பங்கெடுத்த அனைத்து குழந்தைகளுக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியை சிறப்பான முறையில் GIO நிர்வாகிகள் ஏற்ப்பாடு செய்திருந்தனர்.

# ஏழைகளுக்கு உணவு பொட்டலங்கள் வினியோகம்

ஏழைகளுக்கு உணவு பொட்டலங்கள் விநியோகம் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உடுமலை கிளை மகளிரணி சார்பாக 16.08.2025 சனிக்கிழமை அன்று இரவு உணவு பொட்டலங்கள் ஏழை, எளியோர்க்கு வழங்கப்பட்டது. விதவைகள், இயலாமல் வாடும் வயதானவர்கள், அநாதை குழந்தைகள் உள்ளிட்ட வர்களுக்கு உணவு பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டது. உணவை வாங்கும்போது மிகுந்த மகிழ்ச்சியுடனும், அவர்களின் கஷ்டங்களையும் கூறி அழுதனர். பிறகு நாம் அவர்களுக்கு இறைவனை நம்புங்கள் அவன் உங்களுக்கு உதவுவான் என்று ஆறுதல் கூறினோம். அவர்களின் இயலாமை நீங்கி வளமான வாழ்க்கை அமைய எல்லாம் வல்ல இறைனிடம் பிரார்த்தனைகள் செய்தோம்..! இந்த நிகழ்வில் உடுமலை ஜமாஅத் மகளிர் அணியின் தலைவி சகோதரி: மெமஹராஜ் சான் பாட்சா அவர்கள் தலைமையில் ஊழியர்கள் பங்கெடுத்து உதவிகள் செய்தனர்.

# சமூக நல்லிணக்க சந்திப்புகள்...

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் மற்றும் மக்கள் தொடர்பு செயளாலர் ஜனாப். S.N. சிக்கந்தர் சாஹிப் அவர்கள் திருப்பூர் வருகை தந்திருந்தார். அது சமயம் சமூக நல்லிணக்க பேரவை ஏற்படுத்த மற்றும் பிரமுகர்களை சந்திக்கும் சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் திருப்பூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநகரத் தலைவர் ஜனாப். A. முஹம்மது காசிம் அவர்கள் தலைமையில் அழைப்பாளர் A. அன்வர்தீன் திருப்பூர் மக்கள் தொடர்பு செயலாளர் ஜனாப். அப்துல் ரசீத் திருப்பூர் ஊடகப் பொருப்பாளர் ஜனாப். இஸ்ஹாக் ஜனாப். ராஜா முஹம்மது ஆகியோர் கொண்ட ஒருங்கிணைந்த குழுவுடன் சந்திப்புகள் நடைபெற்றது. நம்மை சுற்றி அமைதியான நிலையை உருவாக்குவது நம் பணிகளில் ஒன்று இன்று நமக்கும் நம்முடன் இருக்கும் மற்ற சமூதாயங்களுக்கும் ஃபாசிசம் மிக அச்சுறுத்தலாக இருக்கிறது இது இஸ்லாமிய சமூகத்தை மட்டும் பாதிக்கும் நிகழ்வு அல்ல. இன்றைய சூழல்களில் அரசியல் காரணங்களினால் சமூகங்கள் நசிக்கி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சமூகங்கள் மத்தியில் ஒற்றுமைகள் குறைந்து காணப்படுகிறது. தீங்கு யாருக்கு வந்தாலும் அது தீங்கு தான் இன்று ஃபாசிசத்தால் சிறுபான்மை சமூகம் தாக்கப்படுகிறது என்றால் அந்த சமூகம் அடையும் இன்னல்களை விட வேடிக்கை பார்த்து கொண்டுயிருக்கும் பெரும் சமூகம் சொல்லாத என்னற்ற பாதிப்புகளுக்கு அடக்குமுறைகளுக்கு ஆட்படுத்தப்பட்டு கொண்டுதான் இருக்கின்றன. துரதிஷ்டம் என்ன என்றால் அவற்றை பற்றி அவர்கள் அறியாமல் ஃபாசிச சக்தியை ஆதரித்து கொண்டு உள்ளனர். இந்த கொடிய நோய் அனைவரையும் காவுவாங்கி விட கூடாது





என்ற அழுத்தமான விழிப்புணர்வை மக்களிடத்தில் எடுத்து சொல்ல வேண்டும். மேலும் சமூகங்களின் அடையாளமாக இருக்க கூடியவர்களிடம் இந்த குறிக்கோளை கொண்டு செல்லும் போது அதன் தாக்கம் பாமரமக்களையும் சென்றடையும் என்பதால் பல சமூக பிரமுகர்களை சந்தித்து இன்றைய நிலைகளை பற்றியும் இதனால் பாதிப்பு அனைவருக்குமானது என்ற உண்மையை எடுத்துரைக்க சமய நல்லிணக்க

பிரமுகர்கள் சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆர்.சி.சி தேவாலயம் திருச்சபை தந்தை மரியாதைகுரிய ஜெப மாலை ராஜ் அவர்களை சந்தித்து சிறுபான்மையினர் நிலைகள் சட்டத்தால் ஏற்படகூடிய பாரதூர விளைவுகள் பற்றி கலந்துரையாடல் இனிதாக அமைந்தது. திருப்பூர் பிரபலானவர் நல்ல சமூகசேவை பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் கிட்ஸ் கிளப் பள்ளியின் தலைமை பொருப்பாளர் திரு. மோகன் கார்த்திக் அவர்களுடனான சந்திப்பு மிக அருமையாக அமைந்தது சமூக பார்வையுடன் அவருடைய சிந்தனை மேலும் இஸ்லாமியர்களுடனான நட்பு என அகமகிழ்வை ஏற்படுத்தியது. பெந்தகோஸ்து தேவாலயம் பாஸ்டர் திரு. ஆனந்த் அவர்களை சந்தித்திதோம் பாசிச குழுவால் ஏற்பட்ட காயத்தையும் இரணங்களையும் பகிர்ந்து கொண்டார் சமூக நல்லிணக்கம் ஏற்படுத்த எப்ப வேண்டுமானாலும் அழையுங்கள் உங்களுடன் நானும் களம் காண தயார் என்ற வார்த்தைகள் மேலும் வலுசேர்த்து. திருப்பூர் அறிவியல் கழகம் நிர்வாகியான கௌரி சங்கர் அவர்களை சந்தித்தோம் மாணவர்களிடத்தில் எத்தகைய அறிவியலுடன் சற்றும் உடன்படாத பாடங்களை ஃபாசிச சித்தாந்தம் தினிப்பை பற்றியும் வருங்காலம் சீர்படுத்த வேண்டும் முதலில் கேள்வி எழுப்பகூடிய சமூதாயத்தை கட்டமைக்க வேண்டும் என்ற பார்வையுடன் சந்திப்பு மிக அழகாக அமைந்தது. திருப்பூர் குர்பானி அறக்கட்டளை ஜனாப். ஃபைசல் மற்றும் நிர்வாகிகள் சந்திப்பு மிகவும் இணக்கமாக அமைந்தது அருமையான உரையாடல்கள் இடம்பெற்றன மாற்று சமூதாய மக்கள் பிரமுகர்கள் நம் சமூக மத்தியில் பணிசெய்ய உறுதியாக உள்ளதையும் தோலோடு தோல் கொடுக்க தயாராக உள்ளார்கள் நம் சமூகம் அதை ஏற்க தொய்வு காட்டுவதையும் தற்போது உலமாக்கள் இதை புரிந்து கொண்டு இருக்கிறார்கள் மாற்றம் நிகழும் என்பதையும் சந்திப்பில் பகிர்ந்து கொண்டார் மிக கண்ணியமான உரையாடல் பகிர்வுகள் நடைபெற்றன. இறுதியாக ஜமாஅத் உறுப்பினர்கள், ஊழியர்கள் சிறப்பு கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. களங்கள் உள்ளது செயல்படுவதே முதன்மை நோக்கமாக இருக்க வேண்டும் என்று அனைவரிடமும் எடுத்துரைக்கப்பட்டது.





# துவக்க விழா!




ஹிதாயா மகளிர் இஸ்லாமியக் கல்லூரி துவக்க விழா வேலூரில் சிறப்பாக நடைபெற்றது வேலூர் மாநகரில் நிறுவப்பட்டுள்ள ஹிதாயா மகளிர் இஸ்லாமியக் கல்லூரி துவக்க விழா 18-08-2025 திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு இஸ்லாமிக் சென்டர் வளாகம், மதார் சாஹெப் தெரு, R.N. பாளையத்தில் இனிதே நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், தமிழ்நாடு & புதுச்சேரி தலைவர் மவுலவி முஹம்மத் ஹனீஃபா மன்பயீ அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். முன்னிலையில் மவுலவி அப்ஜலுல் உலமா M.I. முஹம்மத் சித்தீக் உமரி மதனி, M.A., M.Com., முதல்வர், குலியத்துஸ் ஸலாம் அரபிக் கல்லூரி, திருச்சி அவர்கள் பங்கேற்று உரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களாக ஆலிஜனாப் அல்ஹாஜ் V.K. அப்துல் அலீம் சாஹிப் B.A., தலைவர், வேலூர் மஸாஜித் அசோசியேஷன் Dr. ஹாபிஸ் மவுலவி பஷீருல் ஹக் குரைஷி M.A., Ph.D., பேராசிரியர், தாருல் உலூம் லத்தீபியா கல்லூரி, வேலூர் முஃப்தி, ஹாபிஸ் கதீப் அஹ்மத் சயீத் பாகவி, Govt. Khazi, வேலூர் மாவட்டம் & Secretary, Jamiat Ulama Tamil Nadu ஜனாப் C. துஃபைல் அஹ்மத் சாஹிப், General Secretary, Islamic Centre, Vellore ஜனாப் I. ஜலாலுத்தீன், M.Sc., M.Phil., (Ph.D.), Secretary & Correspondent, Goodword Public School, Chennai ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரைகள் வழங்கினர். இந்த கல்லூரியின் துவக்கம், வேலூர் மாநகரில் இஸ்லாமிய மகளிர் கல்வி வளர்ச்சிக்கான ஒரு முக்கியமான கட்டமாகவும், எதிர்கால தலைமுறைக்குப் பெரிய நன்மையாகவும் இருக்கும் என்று அனைவரும் பாராட்டினர்.

# சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்திய இஸ்லாமிய இளைஞர்களின் மரக்கன்றுகள் நடுதல் நிகழ்வு



சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்திய இஸ்லாமிய இளைஞர்களின் மரக்கன்றுகள் நடுதல் நிகழ்வு ஆகஸ்ட் -27/2025 உடுமலை மாரியம்மன் கோவிலுக்கு சொந்தமான விநாயகர் கோவில் வளாகத்தில் மரக்கன்றுகள் நடுங்கள் என்ற கோவிலின் அறங்காவலர்

திரு. ஸ்ரீதர் அவர்களின் கோரிக்கையை ஏற்று உடுமலை நகர இந்திய மாணவர் இஸ்லாமி அமைப்பு ( SIO) மற்றும் சாலிடாரிட்டி அமைப்பு இணைந்து கோயில் வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு வைத்தனர். மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக திகழும் இந்த நிகழ்வில் SIO, சாலிடாரிட்டி இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர். இந்த நிகழ்வின் முடிவில் கோவில் அறங்காவலர் திரு.ஸ்ரீதர் அவர்கள் அனைவரையும் பாராட்டினார்.



## பண்புப் பயிற்ச்சி சிறப்பு நிகழ்வு - மதுரை

பண்புப் பயிற்ச்சி [தர்பியா] சிறப்பு நிகழ்ச்சி ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை சார்பாக தர்பியா நிகழ்வு 04.09.25 அன்று நடைபெற்றது இந்நிகழ்விற்கு மதுரை கிளை தலைவர் A. முஹைதீன் குட்டி உமரி அவர்கள் தலைமை தாங்கினார் திருக்குர்ஆன் விரிவுரை சகோதரி ஜரினா யூசூப் ஆலிமா அவர்கள் நிகழ்த்தினார் அதில் அர்ப்பணிப்பு / கீழ்படிதல் / இறை அழைப்புக்கு பதிலளித்தல் போன்ற விஷயங்களை நினைவூட்டி பேசினார் சிறப்பு விருந்தினராக மாநில செயலாளர் சகோதரர் V.S. முஹம்மது அமீன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார் அதில் அவர் குறிப்பிடுகையில் ஜமாஅத்தின் அடிப்படை கட்டாய பணிகள், பணிகளில் தெளிவான முன்னெடுப்பு, அதற்கான தயாரிப்பு போன்ற விஷயங்களை குறிப்பிட்டு பேசினார் சகோதரி நூர் மர்ஜியா நிகழ்ச்சியை வழிநடத்தினார். மதுரை மகளிர் பொறுப்பாளர் சகோதரி நஜ்மா அலி நன்றியுரை ஆற்றினார் நிகழ்ச்சியில் உறுப்பினர், ஊழியர் கலந்து கொண்டனர்.

## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை சார்பாக நடைபெற்ற ஊழியர் அபிமானிகள்சிறப்பு கூட்டம்,




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை சார்பாக நடைபெற்ற ஊழியர் அபிமானிகள் சிறப்பு கூட்டம் 5.09.25 அன்று மதுரையில் நடைபெற்றது ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்

மதுரை கிளை தலைவர் மௌலவி முஹைதீன் குட்டி உமரி அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்கள் தொடக்கமாக மதுரை இஸ்மாயில் புரம் பகுதி பொறுப்பாளர் சகோ. S.முஹம்மது ரஃபிக் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார் இதில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில ஆலோசனை குழு உறுப்பினர் சமரசம் பொறுப்பாசிரியர் சகோ. V.S. முஹம்மது அமீன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் அவர் உரையில் 1. தாவாவின் களங்கள் 2. சமூக நல்லிணக்கத்திற்கான வாய்ப்புகள் 3. சமூகத்தில் நிலவும் நல்ல சான்றுகளும், கெட்ட சான்றுகளும் 4. பணிகளில் இளைஞர்களின் பங்கு போன்ற விஷயங்களை விளக்கமாக எடுத்துரைத்தார் இதில் 22 பேர் பங்குபெற்றனர் இறுதியாக மதுரை செல்லூர் பகுதி பொறுப்பாளர் சகோ. A. அவுல் பீர் அவர்களின் நன்றியுரையோடு நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## ஆசிரியர் தினவிழா முன்னிட்டு




ஆசிரியர் தினவிழா முன்னிட்டு திருப்பூர் மாவட்டத்தில் கருமாரம்பாளையம் பகுதியில் இயங்கிவரும் தொக்க பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களை சந்தித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பின் சார்பாக பெண்கள் வட்டம் ஊழியர்கள் சகோதரி. சம்ஷியா பானு, சகோதரி. பர்வீன், சகோதரி. மைதீன் ஆகியோர் ஆசிரியர்களை சந்தித்து



ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்தனர் பள்ளியின் கண்காணிப்பாளர் ஜமாஅத் மக்களை வரவேற்றது சகோதத்துவத்தை வெளிபடுத்தும் விதமாக அமைந்தது மேலும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அவர்களிடத்தில் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது ஆசிரியர் பணியே அறப்பணியாகும் என்றும் நபிமொழி இவ்வாறு கூறுகிறது கற்பவராக இருக்கவேண்டும், கற்றுதருபவராக இருக்கவேண்டும் அல்லது கற்க உதவி செய்பவராக இருத்தல் வேண்டும் என்று கூறிய நன்மொழியினை நினைவுப்படுத்தி ஆசிரியர்கள் தியாகம், மனப்பான்மை எதிர்கால சமூதாயத்தை கட்டமைக்கும் மிக சிறந்த ஒளிகீற்றாக ஆசிரியர்கள் திகழ்கிறார்கள் என்று

கூறி அவர்களுக்கு இனிப்புகள் வழங்கி நிகழ்ச்சி இனிமையான சந்திப்பாக அமையபெற்றது.

## கடையநல்லூர் மீலாது & ஆசிரியர் தின சிறப்பு நிகழ்ச்சி:



05/09/2025 (12/03/1447) வெள்ளிக்கிழமை கடையநல்லூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பாக, கடையநல்லூர் பேட்டை முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியில் வைத்து மீலாது & ஆசிரியர் தின சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கடையநல்லூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த பொறுப்பாளர் பீர் முஹம்மது அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார்கள். ஆரம்பமாக சகோதரி ஜுவைரிய்யா பானு கிராஅத் ஓதினார்கள். சகோதரர் பொறியாளர் ஜபருல்லாஹ் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்கள். ஜமாஅத்தின் நகரப் பொறுப்பாளர் சகோதரர் பீர் முஹம்மது அவர்களின் அறிமுக உரைக்குப் பிறகு மவ்லவி அஹமத் முஹ்யித்தீன் ஃபைஜி அவர்கள் ஜமாஅத்தின் பணிகள் பற்றிய அறிமுக உரை நிகழ்த்தினார்கள். கடையநல்லூர் உலகா மேல்நிலைப்பள்ளி நிர்வாகி, Ln. நல்லாசிரியர் சண்முக சுந்தரம், M.A., M.Ed. M.Phil.,M-BA. அவர்களும், தமிழ் நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் வட்டார செயலாளர் E. ரமேஷ் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.



அதைத் தொடர்ந்து AIITA-வின மாநிலத் தலைவர் முனைவர் ஸலாஹுத்தீன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். இறுதியாக சகோதரர் அப்துர் ரஹ்மான் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

## சேலம் ஆசிரியர்கள் தினம் அனுசரிப்பு:

செப்டம்பர்- 05 ஆசிரியர் தினத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சேலம் பச்சப்பட்டி மற்றும் ஜங்ஷன் வட்டங்களின் சார்பாக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு குட்வில் ஸ்கூல் , கிரெசென்ட் ஸ்கூல் , அரசினர் தொடக்கப்பள்ளி பச்சபட்டி, அரசினர் தொடக்கப் பள்ளி ஜங்ஷன், மற்றும் தாருல் இஸ்லாம் மேல் நிலை பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு சென்று



ஆசிரியர்களை சந்தித்து ஆசிரியர் தின வாழ்த்துக்களை தெரிவித்து அவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. அதைத்தொடர்ந்து சமரசம் உதயதாரகை மற்றும் இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டனர். ஆசிரியர்களும் தங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். இந்த சந்திப்பில் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் சேலம் பச்சப்பட்டி மற்றும் ஜங்ஷன் வட்டங்களின் பெண் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## “சமூக நல்லிணக்க மீலாது விழா மற்றும் கண்காட்சி”

அல்லாஹ்வின் மாபெரும் அருளால் “சமூக நல்லிணக்க மீலாது விழா மற்றும் கண்காட்சி” ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், திருவள்ளூர் மாவட்டம், கோணிமேடு கிளை சார்பாக 6-9-2025 அன்று இனிதே நடைபெற்றது. இந்நிகழ்வை GIO மாணவிகள் கிராஅத் ஓதி ஆரம்பித்தனர். சகோதரர் முஹம்மது சமீர் அவர்கள் வரவேற்பு உரையாற்றினார். கோனிமேடு கிளைத் தலைவர் சகோதரர் சர்புதீன் தலைமை உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட தவத்திரு. திருவடிக்குடில் சுவாமிகள் அவர்கள் “உலக மக்கள் அனைவருக்குமானவர் நபிகள் நாயகம்” என்ற தலைப்பில் உரையாற்றினார்கள்.

அவர்களை தொடர்ந்து ஜமாஅத் தே இஸ்லாமிய ஹிந்த் ,மாநில செயலாளர் S.N.சிக்கந்தர் சாஹிப் அவர்கள் நபிகள் நாயகம் மாபெரும் சாதனையாளர், உலக மக்களுக்கான வழிகாட்டி என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். இதில் மொத்தம் 150-க்கும் அதிகமான முஸ்லிம் மற்றும் சகோதர சமய மக்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.



GIO மற்றும் CIO மாணவர்கள் இணைந்து இஸ்லாமிய கண்காட்சி ஏற்பாடு செய்திருந்தனர். 25க்கும் அதிகமான மாதிரிகள், அழைப்பு பணி,



இஸ்லாமிய சமுதாய சீர்திருத்தம், தஸ்கியா என்ற அடிப்படையில் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. சகோதரர். அஹமது பாட்ஷா அவர்களின் நன்றியுரை உடன் இனிதே நிறைவுற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

# ஆசிரியர் தின சந்திப்பு நிகழ்ச்சி



ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆல் இந்தியா ஐடியல் டீச்சர்ஸ் அசோசியேஷன் (AIITA) திருச்சி கிளை சார்பில் ஆசிரியர் தின சந்திப்பு நிகழ்ச்சி 06.09.2025 அன்று திருச்சி சஸ்திரி சாலையில் அமைந்துள்ள KMS ஹாலில் நடைபெற்றது. துவக்கமாக தைய்யிபா மகளிர் அரபிக் கல்லூரி முதல்வர் ஜனாபா ஷாஜிதா பேகம் அவர்கள் திருமறையின் வசனங்களை ஓதி நிகழ்ச்சியை துவங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தி திருச்சி கிளை பொறுப்பாளர் முனைவர் ஹஜ் மெய்தீன் அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையில் ஆசிரியர்கள் சமூக கட்டமைப்பில் வகிக்கும் முக்கிய பங்கு, மாணவர்களின் வாழ்வில் அவர்கள் விதைக்கும் நற்பண்புகள் மற்றும் நன்னெறிகள் குறித்து வலியுறுத்தினார். பின்னர், AIITA மாநிலச் செயலாளர் ஜனாப் ஷேக் இஸ்மாயில் அவர்கள், AIITA அமைப்பின் நோக்கங்கள், அதன் கல்வி பங்களிப்புகள் மற்றும் ஆசிரியர்களை ஒருங்கிணைக்கும் பணிகள் குறித்து விரிவாக அறிமுகம் செய்தார். சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த அரசங்குடி அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் டாக்டர் P. ஆண்டனி லூயிஸ் மாத்யஸ் அவர்களின் கல்வி சேவையைப் பாராட்டி கேடயம் வழங்கப்பட்டது. இன்றைய தலைமுறையை அறிவார்ந்ததாகவும், பொறுப்புள்ளவர்களாகவும், நல்ல குடிமக்களாகவும் மாற்றுவதில் ஆசிரியர்களின் பங்கு எப்போதும் மறக்க முடியாதது. நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த AIITA – திருச்சி கிளைக்கு நன்றியைத் தெரிவித்தார்.



பின்னர், சமரசம் இருமாத இதழின் ஆசிரியர் ஜனாப் V. S. முஹம்மது அமீன் அவர்கள் ஆசிரியர் தின சிறப்புரை நிகழ்த்தினார். அவர் தம் உரையில், ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், அவர்களின் சமூகப் பொறுப்பு மற்றும் கல்வியின் மனிதநேயக் கண்ணோட்டம் குறித்து சிந்தனைத் தூண்டும் கருத்துக்களை பகிர்ந்தார். நிகழ்ச்சி நிறைவாக, அல்மா லூசண்ட் நர்சரி & பிரைமரி பள்ளி முதல்வர் ஜனாபா K. நிஷா அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இதில் நிகழ்ச்சியை முன்னெடுத்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்ததோடு, பங்கேற்ற ஆசிரியர்களின் பங்களிப்பையும் சிறப்பித்தார். முழு நிகழ்ச்சியையும் பேராசிரியர் உமர் பாரூக் அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார். இந்நிகழ்ச்சியில் திருச்சியின் 14-ற்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 50-க்கும் அதிகமான ஆசிரியர்கள் கலந்து கொண்டு, நிகழ்ச்சியை சிறப்பித்தனர். ஆசிரியர்களின் சேவையை பாராட்டியும், சமூக பங்களிப்பை முன்னிறுத்தியும், பொறுப்பை நினைவுப்படுத்தும் வகையில் இந்நிகழ்ச்சி சிறப்பாக அமைந்தது.

# இளைஞர்களுக்கான சிறப்புச் சந்திப்பு நிகழ்ச்சி




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ சார்பில் இளைஞர் சந்திப்பு நிகழ்ச்சி சென்னை: ஜமாஅத்-இ-இஸ்லாமி ஹிந்த் (JIH) சென்னை மெட்ரோ சார்பாக, கடந்த செப்டம்பர் 14, 2025 அன்று, "பன்மைச் சமூகத்தில் நம்பிக்கை மற்றும் அடையாளம்" (Faith & Identity in a Plural Society) என்ற தலைப்பில் இளைஞர்களுக்கான சிறப்புச் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு துணை அமீர் ஐ. ஜலாலுதீன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். நவீன உலகில் இஸ்லாமிய இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும், இஸ்லாமிய நம்பிக்கையையும் தனித்துவத்தையும் பேணிக்காப்பது குறித்தும் தனது உரையில் ஆழமாகப் பேசினார். இந்நிகழ்வில் 100-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். கலந்துரையாடல் அமர்வின் மூலம்



இளைஞர்கள் தங்களின் சந்தேகங்களைக் கேட்டறிந்து, பயனுள்ள வழிகாட்டுதல்களைப் பெற்றுக்கொண்டனர். இந்தச் சந்திப்பு, இளைஞர்களிடையே விழிப்புணர்வையும், நம்பிக்கையையும் வளர்ப்பதற்கான ஒரு முக்கிய முயற்சியாக அமைந்தது.


# அண்ணல் நபிகளார் (ஸல்) வாழ்வும் நமக்கு படிப்பினையும்...




அகிலத்திற்கு ஓர் அருட்கொடை அண்ணல் நபிகளார் (ஸல்) வாழ்வும் நமக்கு படிப்பினையும் என்ற தலைப்பில் திருப்பூர் கேரள கிளையின் கேரள மக்களை ஒருங்கினைத்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தனர். இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக சி.டி. சுஹைப் Speaker: C. T. Suhaib சாலிடாரிட்டி முன்னாள் மாநிலதலைவர்,கேரளா (Former State President Solidarity Youth Movement, Kerala) அவர்கள் வருகைபுரிந்தார். சரியாக நிகழ்வு 7:30 மணிக்கு ஃபதிஹ்டர்ஃஃப்F மைதானத்தின் அருகில் ChamperHallல் ஆரம்பமானது. மேலும் பல கேரள ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்ந்த திருப்பூர் சகோததர்கள் மக்கள் வருகைபுரிந்தனர், திருப்பூர் மாவட்டம் சார்பாக அமீரே முகாமி ஜனாப். முஹமது காசிம் அவர்கள் மற்றும் இஸ்ஹாக், இர்ஃபான் ஆகியோர் கலந்து கொண்டனர், திருப்பூர் முகாமி வரவேற்கும் விதமாக நிகழ்ச்சிக்கு வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்ச்சி இரவு உணவுடன் முடிவுபெற்றது.

# ஆசிரியர் தினம் சிறப்பு நிகழ்ச்சி கிருஷ்ணகிரி...

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளை & ALL INDIA IDEAL TEACHERS ASSOCIATION இணைந்து நடத்திய ஆசிரியர் தினம் சிறப்பு நிகழ்ச்சி கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில்



18.09.2025 வியாழக்கிழமை காலை 10.30 மணி முதல் 12.00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நகர தலைவர் திரு சிபகத்துல்லாஹ் தலைமை தாங்கி வரவேற்புரை

நிகழ்த்தினார். மேலும் ஜமாஅத் செய்து வருகின்ற மக்கள் சேவை பணிகளை சிறப்பாக எடுத்துரைத்தார். நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்த தலைமையாசிரியர் திரு ரமேஷ் அவர்கள் ஆசிரியர் என்பவர் கற்பவராகவும் கற்பிப்பவராகவும் சிறந்து விளங்க வேண்டும் என எடுத்துரைத்தார். பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு திருமலை செல்வன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. முனிராஜ் அவர்கள் கலந்து கொண்டு ஆசிரியர் தினம் என்பது வருடத்திற்கு ஒருமுறை கொண்டாட கூடிய நிகழ்வு அல்ல மாறாக தினம் தினம் போற்றக்கூடிய சிறந்த சமூகம் ஆசிரியர் சமூகம் என்ற கருத்தை முன்வைத்தோடு ஜமாஅத் இதுபோன்ற பொது நிகழ்ச்சிகளில் முன்னெடுத்து சிறப்பாக செய்வது எங்களுக்கெல்லாம் ஆச்சரியமாகவும் அதே சமயம் மகிழ்ச்சிகரமாகவும் இருக்கிறது என்று ஜமாஅத்தை பாராட்டினார். அகில இந்திய முன்மாதிரி ஆசிரியர்கள் சங்கம் (All-TA) திரு அப்துல் அலீம் அவர்கள் ஆசிரியர்களோடு கலந்துரையாடல் முறையில் டாக்டர் ராதாகிருஷ்ணன், அப்துல் கலாம் மற்றும் ஒரு



சிறந்த ஆசிரியராக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பண்புகள்! 1. தெளிவு மற்றும் எளிமை, 2. பொறுமை மற்றும் மென்மை, 3. முன்மாதிரியாக கற்பித்தல், 4. கற்பவர்களுக்கு ஏற்ப மாற்றியமைத்தல், 5. உந்துதல் மற்றும் ஊக்கமளித்தல் ஆகிய உதாரணம் கொண்டு சிறப்பாக எடுத்துரைத்தார். நிகழ்ச்சியை முஹம்மத் சாலிஹா வழிநடத்தினார். ஜமாஅத் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

# ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்திய துணைத் தலைவர் சென்னையில் சிறப்புக் கூட்டம்...

சென்னை: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பின் அகில இந்திய துணைத் தலைவர் பேராசிரியர் முஹம்மது சலீம் சாஹிப் அவர்களின் சென்னை வருகையை ஒட்டி, சென்னை மெட்ரோ சார்பாக ஒருசிறப்புக் கூட்டம் 29.08.2025 அன்று மாலை நடத்தப்பட்டது. இக்கூட்டத்திற்கு அமீரே ஹல்கா (மாநிலத் தலைவர்) மௌலவி முஹம்மது ஹனீபா





அவர்கள் தலைமை தாங்கினார். சென்னை மெட்ரோவின் நாஜிம் (நிர்வாகி) அத்தாவுல்லா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். கூட்டத்தில் சிறப்புரையாற்றிய பேராசிரியர் முஹம்மது சலீம் சாஹிப் அவர்கள், சமகால சமூக மற்றும் ஆன்மிகச் சவால்கள் குறித்து விரிவாகப் பேசினார். அவரது உரைக்குப் பின், பங்கேற்பாளர்களால் எழுப்பப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். கேள்வி-பதில் பகுதி, பொதுமக்களிடையே பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. நிகழ்ச்சியின் நிறைவில், ஜமாஅத் அமைப்புச் செயலாளர் ஜலாலுத்தீன் மற்றும் சென்னை மெட்ரோவின் ஆலோசனைக் குழு உறுப்பினர் இம்ரான் லத்தீப் சேட் ஆகியோர் நன்றி உரை வழங்கினர். இந்த நிகழ்ச்சி, சென்னையில் உள்ள ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களிடையே மிகுந்த எழுச்சியை ஏற்படுத்தியது.

# I love Mohamed:

பத்திரிக்கை அறிக்கை 25 செப்டம்பர் 2025. I love Mohamed ‘நான் முஹம்மது நபியை நேசிக்கிறேன்’ என்ற கோஷங்களை குற்றமாக்குவது அரசியல் சாசனத்திற்கு எதிரானது, அரசியல் உள்நோக்கம் கொண்டது மற்றும் இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு அவமதிப்பு: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) அகில இந்திய துணைத் தலைவர் மலிக் மொஹ்தசிம் கான் அவர்கள் இந்தியா முழுவதும் முஸ்லிம்கள் மீது ‘நான் முஹம்மது நபியை நேசிக்கிறேன்’ என்ற பதாகைகள் மற்றும் கோஷங்களை வெளிப்படுத்தியதற்காக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகள் (FIR) மற்றும் கைதுகளுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அளித்த அறிக்கையில் மாலிக் மொஹ்தசிம் கான் அவர்கள் கூறியதாவது: “நான் முஹம்மது நபியை நேசிக்கிறேன்”என்ற கோஷம் சமூகப் பிளவைத் தூண்டும் என்ற கருத்து அடிப்படையில் பிழையானது மற்றும் இந்தியாவின் பன்முகத்தன்மையையும், அனைத்து மதங்களையும் மதிக்கும் பண்பையும் அவமதிக்கும் செயல் ஆகும். பல நூற்றாண்டுகளாக இந்திய மக்கள் ஒருவரையொருவர் மதங்களின் உணர்வுகளை மதித்து ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். அரசியல் உள்நோக்கங்களும், சமூகப்

பாகுபாட்டு காவல்துறை நடவடிக்கைகளும் தேவையற்ற பதற்றங்களை ஏற்படுத்தி, இணக்கமான சமூகத்தை பாதிப்படைய செய்கின்றன. அவர் மேலும் கூறினார், “முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அனைத்து மனித குலத்திற்கும் கருணையின் தூதராக உள்ளவர். அவர்மீது அன்பை வெளிப்படுத்துவதை குற்றமாக்குவது மிகவும் வருத்தத்திற்குரியது மட்டுமல்ல அரசியல் சாசனத்திற்கும் எதிரானது. இது இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவு 19(1)(a) (பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம்) மற்றும் பிரிவு 25 (மதத்தை ஏற்றுக்கொள்ளுதல், மதத்தை பின் பற்றுதல், பிரச்சாரம் செய்தல்) ஆகியவற்றால் உறுதி செய்யப்பட்ட உரிமைகளை மீறுகிறது. அமைதியான மத வெளிப்பாடு சமூக இணக்கத்திற்கு அச்சுறுத்தல் அல்ல! இது நமது தேசத்தின் ஒழுக்கப் பண்புகளை வலுப்படுத்தும் அடிப்படை உரிமையாகும். சிவில் உரிமைகளுக்கான பாதுகாப்பு சங்கத்தின் (APCR) தரவுகளின்படி, உத்தரப் பிரதேசத்தின் கான்பூரில் தொடங்கிய காவல்துறை நடவடிக்கை இப்போது நாடு முழுவதும் விரிவடைந்துள்ளது. குறைந்தது 21 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டு, 1,324 முஸ்லிம்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். உத்தரப் பிரதேசத்தில் மட்டும் (16 வழக்குகள், 1,000-க்கும் மேற்பட்ட குற்றவாளிகள்) உத்தரகாண்ட், குஜராத், மற்றும் மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களிலும் இதேபோன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த சமமற்ற, அரசியல் உள்நோக்கம் கொண்ட ஒடுக்குமுறையை கடுமையாக விமர்சித்தார். கான்பூரில் நிர்வாகத்தால் செய்யப்பட்ட




பிழைகளை ஒப்புக்கொண்டு திருத்துவதற்கு பதிலாக, அதிகாரிகள் வேண்டுமென்றே இந்த பிரச்சினையை தீவிரப்படுத்தி, நாடு முழுவதும் பதற்றத்தை பரப்பியுள்ளனர். முஹம்மது நபியின் மீதான அன்பை அமைதியாக வெளிப்படுத்தியவர்களை இலக்காகக் கொள்வது அரசியல் சாசனத்திற்கு எதிரானது, சட்டத்தின் ஆட்சியை பலவீனப்படுத்துகிறது, மற்றும் ஜனநாயக நிறுவனங்களில் பொதுமக்களின் நம்பிக்கையை சிதைக்கிறது. இத்தகைய செயல்கள், புனையப்பட்ட பிரச்சினைகளைப்

பயன்படுத்தி சமூகத்தைப் பிளவுபடுத்த முயல்கின்றன. முஸ்லிம் சமூகம் இந்த பிரச்சினையை அறிவுரீதியாகவும், நம்பிக்கையுடனும், பதிலளிக்கும் வகையிலும் அணுகுமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார், மேலும் முஹம்மது நபி ஸல் அவர்களின் கருணை, நீதி, மற்றும் அமைதி குறித்த போதனைகளை எடுத்துரைக்க இந்த வாய்ப்பை பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். அதேவேளையில் அரசாங்கமும், காவல்துறையும் தவறான மற்றும் அதிகப்படியான முதல் தகவல் அறிக்கைகளை FIR உடனடியாக திரும்பப் பெறவும், தவறாக கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கவும், அதிகார துஷ்பிரயோகம் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் அவர் வலியுறுத்தினார். அடிப்படை உரிமைகளை மதித்தல், மதப் பன்முகத்தன்மை, மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவை இந்தியாவின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் மூலக்கற்கள். அமைதியான முறையில் I love Mohamed அன்பை, வெளிப்படுத்துவதை குற்றமாக்கும் முயற்சிகள் இந்த அஸ்திவாரங்களை அச்சுறுத்துகின்றன என்று மலிக் மொஹ்தசிம் கான் அவர்கள் கூறினார். வெளியீடு: சல்மான் அஹ்மத் தேசிய செயலாளர், ஊடகத் துறை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், தலைமையகம் புது தில்லி.

## மிகுந்த கவலைக்குரிய விஷயம்.

28 செப்டம்பர் 2025 பத்திரிகை அறிக்கை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்திய தலைவர் தலைவர் சையத் ச ஆதாதுல்லாஹ் ஹுஸைனி அவர்கள் மௌலானா தவ்ஃகீர் ரஸா கான் கைது குறித்த அறிக்கை புது தில்லி: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் சையத் சஆதாதுல்லாஹ் ஹுஸைனி பரேலியில் மவுலானா தவ்ஃகீர் ரஸா கான் மற்றும் பலரின் நியாயமற்ற கைது குறித்து கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் குறித்து தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்திய அவர் பின்வருமாறு கூறினார்: பரேலியில் மதிப்பிற்குரிய அறிஞர் மௌலானா தவ்ஃகீர் ரஸா கான் மற்றும் பலரின் கைது, மிகுந்த கவலைக்குரிய விஷயமாகும். இது, பகைமை அரசியல் மற்றும் வெறுப்புணர்வால் இயக்கப்படும் ஆட்சி நமது நாட்டை எந்தத் திசையில் கொண்டு செல்கிறது என்பதற்கு ஒரு துயரமான பிரதிபலிப்பாகும். நான் நபி முஹம்மத்  அவர்களை நேசிக்கிறேன்’ என்ற எளிய முழக்கம், பக்தியையும் மரியாதையையும் வெளிப்படுத்தும் ஒரு கூற்று பொது அமைதிக்கு அச்சுறுத்தலாக சித்தரிக்கப்பட்டது. இத்தகைய அமைதியான மத நம்பிக்கையின் வெளிப்பாட்டை பொது வழக்குகளைப் பதிவு

செய்து, வெகுஜன கைதுகள் மூலம் குற்றமாக்குவது நியாயமற்றது மட்டுமல்ல! இது இந்தியாவின் மரியாதை மற்றும் பன்முகத்தன்மை என்ற நாகரிக பண்புக்கு எதிரான கொடூரமான தாக்குதலாகும். பல நூற்றாண்டுகளாக இந்திய மக்கள் ஒருவருக்கு ஒருவர் மத உணர்வுகளை மதித்து ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளனர். இத்தகைய பக்தி வெளிப்பாடு சமூகத்தைப் பிளவுபடுத்தும் என்பது நம்ப முடியாதது மாறாக, இந்த நெருக்கடியை உருவாக்கியது அரசியல் சூழ்ச்சியே ஆகும்.” சையத் சஆதாதுல்லாஹ் ஹுஸைனி மேலும் கூறியதாவது: “மௌலானா அவர்கள் முதலில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதாகவும், பின்னர் பாரதிய நியாய சன்ஹிதாவின் கடுமையான பிரிவுகளின் கீழ் ஆயிரக்கணக்கான முஸ்லிம்களைப் புலனாய்வு இல்லாமல் பெயர் குறிப்பிட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இன்னும் துயரமான விஷயம், மௌலானா போன்ற மதிப்புமிக்க அறிஞருக்கு எதிராக சில அரசியல் தலைவர்கள் இழிவான மொழியைப் பயன்படுத்தியதாகும். இது இந்த முழு நிகழ்வுக்குப் பின்னால் உள்ள அசிங்கமான அரசியலை வெளிப்படுத்துகிறது. இத்தகைய மிகைப்படுத்தப்பட்ட மாநில அதிகாரப் பயன்பாடு சட்டத்தின் ஆட்சியை மட்டுமல்ல, மக்களிடையே பிளவையும், நம்பிக்கையின்மையையும் ஆழப்படுத்துகிறது. “இந்தியா தனது ஜனநாயகப் பயணத்தில் எண்ணற்ற போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும் சந்தித்துள்ளது. கல்வீச்சு அல்லது சொத்து சேதம் போன்ற வன்முறைச் செயல்கள் எப்போதும் கண்டிக்கப்பட வேண்டும் என்றாலும், முறையான விசாரணையின்றி எந்தக் குற்றச்சாட்டும் செல்லுபடியாகாது. சட்ட அமலாக்கம் நியாயமாகவும், விகிதாசாரமாகவும் பதிலளிக்க வேண்டும் என்பது ஆட்சியின் அடிப்படைக் கொள்கையாகும். கடுமையான குற்றச்சாட்டுகள் அல்லது முழு சமூகத்தையும் குற்றவாளியாக்கும் நடவடிக்கைகள் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட குழுவுக்கு எதிராக தேர்ந்தெடுக்கப்பட்டு மிகைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளைப் பயன்படுத்துவது, அரசியலமைப்பின் உணர்வையும், நியாயமான ஆட்சியின் கொள்கைகளையும் மீறுவதாகும்.” இன்று நாம் காண்பது, அரசியல் நோக்கங்களுக்காக மாநில இயந்திரங்கள் மற்றும் சட்ட அமலாக்கத்தை தவறாகப் பயன்படுத்துவதாகும். சட்டம்-ஒழுங்கு சவால்களை பகைமைப் பிரிவினைக்கு



உபயோகப்படுத்துவதற்கான வாய்ப்புகளாக மாற்றப்படுகிறது. ஒவ்வொரு முறை தேர்தல் நெருங்கும் போதும், இதே சுழற்சி மீண்டும் நிகழ்கிறது, சமூகங்கள் பிரிக்கப்படுகின்றன, நம்பிக்கையின்மை உருவாக்கப்படுகிறது, நாட்டின் சமூகத் பணி குறுகிய நோக்கங்களுக்காக தியாகம் செய்யப்படுகிறது. இது ஜனநாயக நிறுவனங்களையும், அரசியலமைப்பு மதிப்புகளையும் அரிக்கும் ஆபத்தான பாதையாகும். மேலும் சையத் சஆதாதுல்லாஹ் ஹுசைனி அவர்கள் கூறுகையில்: முஸ்லிம் சமூகத்தினரை உறுதியாகவும், அமைதியாகவும், நபி முஹம்மத் அவர்களின் பொறுமை, கருணை, மற்றும் இரக்கத்தின் செய்தியால் வழிநடத்தப்படவும் கேட்டுக் கொண்டார். அதே நேரத்தில், அரசாங்கம் மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை உடனடியாக திரும்பப் பெறவும், தவறாக தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுவிக்கவும், ஆட்சியில் நியாயம், விகிதாசாரம், மற்றும் நீதியை மீட்டெடுக்கவும் அவர் வலியுறுத்தினார். "இந்தியாவின் பலம் அதன் அரசியலமைப்பு, பன்முகத்தன்மை, மற்றும் ஒருவருக்கொருவர் மரியாதை என்ற சமூகத் பண்மையில் உள்ளது. குறுகிய கால அரசியல் ஆதாயங்களுக்காக இந்த அடித்தளங்களை பலவீனப்படுத்துவது ஒரு சமூகத்திற்கு மட்டுமல்ல, முழு நாட்டிற்கும் தீங்கு விளைவிக்கும், என்று சையத் சஆதாதுல்லாஹ் ஹுசைனி அவர்கள் கூறினார். வெளியீடு: சல்மான் அஹ்மத் தேசிய செயலாளர், ஊடகத் துறை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், தலைமையகம் புது தில்லி.

# ஆழ்ந்த இரங்கல்...

கரூரில் தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் பிரச்சார நிகழ்வில் கூட்ட நெரிசலில் சிக்கி 35க்கும் மேற்பட்ட உயிர்கள் பலியான செய்தி பெரும் கவலையைத் தருகிறது. இந்த பெரும் துயரில் உயிரிழந்த அனைவருக்கும் எங்களின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். உறவுகளைப் பறிகொடுத்த குடும்பங்களுக்கு வல்ல இறைவன் அழகிய பொறுமையையும் இந்த துயரிலிருந்து கடந்து வரக்கூடிய மன திடத்தையும் தந்தருள்வானாக என்று இந்த நேரத்திலே பிரார்த்தித்துக் கொள்கின்றோம். மேலும் பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். அவர்கள் அனைவரும் சிகிச்சை பெற்று நலமுடன் இல்லங்கள் திரும்புவதற்கும் இறைவன் அருள் புரிவானாக என்றும் பிரார்த்திக்கின்றோம். இந்நிகழ்வில் துரிதமாக செயல்பட்ட காவல்துறை அதிகாரிகள் மேலும் மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்கள் அனைவர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கின்றோம். தக்க சமயத்தில் துரிதமாகச் செயல்பட்டதால் பெரும் உயிரிழப்பு தடுக்கப்பட்டுள்ளது. மேலும் மக்களும் இதுபோன்று மிக அதிகமான கூட்டங்கள் வருகின்ற

பொழுது மிக நேர்த்தியான ஒழுங்குகளை கடைபிடிக்க வேண்டும். காவல்துறை எந்த மாதிரியான அனுமதிகள் வழங்கி இருக்கிறார்களோ அதனை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். மீண்டும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மௌலவி A.முஹம்மது ஹனிபா மன்பயீ மாநிலத் தலைவர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி.